விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 098 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 13 திங்கட்கிழமை (27.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### வெடுக்குநாறிமலையில்
## ஆதிலிங்கம் அழிக்கப்பட்டமைக்கு எதிராக வெடித்தது போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வவுனியா வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையை கண்டித்து யாழ்ப்பாணத்தில் சைவ அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதா 15

### கூகுள் வரைபடத்தில்
## பௌத்த விகாரையாக மாறிய வெடுக்குநாறிமலை

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணிப் பிரதேசத்தில் வெடுக்கு நாறிமலை பகுதியில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் அமை விடம் அமைந் 15




## மூன்றாம் தவணை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான முதல் தவணை கல்வி நடவடிக்கைக்காக பாடசாலைகள் இன்று திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான முதல் தவணை கல்வி நடவடிக்கை இன்று முதல் ஏப்ரல் 4 ஆம் திகதி வரை நடைபெறும் என தெரிவிக்கப் படுகின்றது. 15

### வெடுக்குநாறிமலையில்
**நேற்று நடந்த அட்டூழியம்**
# ஆதிலிங்கம் உடைத்தழிப்பு
### ஏனைய விக்கிரகங்களும் மாயம்





(வவுனியா) வவுனியா.நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பிரதான விக்கிரகமான ஆதிலிங்கம் மற்றும் பிள்ளையார், அம்மன், வைரவர் விக்கிரகங்கள் விசமிகளால் சேதமாக்கப்பட்டும் மற்றும் பெயர்த் தெடுக்கப்பட்டும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## இலவச அரிசி வழங்கும் திட்டம் இன்று ஆரம்பம்



(கொழும்பு)

நாட்டிலுள்ள சுமார் 29 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் இன்று ஆரம்பிக் கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, விவ 15

## அரசாங்க வேலைவாய்ப்பில் வடக்கில் உள்ளவர்களுக்கே முன்னுரிமை
### ஆளுநர் ஜீவன் தியாகராஜா



(யாழ்ப்பாணம்)

வடக்கில் வழங்கப்படும் வேலை வாய்ப்பு நியமனங்களில் வடக்கில் உள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு செயலணியினால் வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கு 15

## யாழில் குற்றச் செயல்களை தடுக்க விசேட திட்டம்
### அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கு விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட் டுள்ளதர்க யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித் துள்ளார்.

வறிய மக்களுக்கான இலவச அரிசிப் பொதி வழங்கும் மாவட்ட மட்ட நிகழ்வு நேற்று யாழ்.நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம் 15

## ஐ.தே.கவுடன் கூட்டணி அமைக்க விருப்பமில்லை
### பொதுஜன பெரமுன

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியமைத்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன தனித்து போட்டியிட வேண்டும் என கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள் 02

## ஐ.எம்.எப் நிதியிலிருந்து அரச ஊழியர்களுக்கு சம்பளம்
### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

மார்ச், ஏப்ரல் மாதங்களுக் கான அரச சேவையாளர் களின் சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் மேலதிக கொடுப்பனவுகளுக்காக சர்வதேச நாணய நிதியத்தி னால் வழங்கப்பட்ட நிதியின் ஒரு தொகையினை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

அரச சேவையா 02

## சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன்



(வவுனியா)

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் உள்ள விக்கிரகங்கள் உடைத்து பெயர்த்தெடுக்கப்பட்டு கொண்டு சென்றமை கண்டனத்துக்குரிய செயற்பாடு என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சைவமக்களின் தொன்மைகளை அழிக்கும் செயற்பாடு தொடர்கிறது. இது திட்டமிட்டு நடைபெறுகிறது. அரசாங்கம் இத்தகைய செயல்களை நிறுத்த வேண்டும்.

தொல்லியல் திணைக்களம் ஆதி சைவக்கோவில்களை சைவமக்கள் பராமரிப்பதற்கு தொடர்ந்து இடையூறு செய்வதும் வேதனைக்குரியது.

விக்கிரகங்களை உடைத்தமை குறித்து ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலயத்திருப் பணி நடைபெறுவதற்கு இந்து கலாசாரத் திணைக்களம் உரிய அனுமதிகளை வழங்க வேண்டும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து சைவசமயத்துக்குவரும் இன்னல்களை போக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித் தார். (4)

## ஐ.தே.கவுட...

என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு-காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கியுள்ளோம். அரசியல் கொள்கை ரீதியில் இரு தரப்பிற்கும் இடையில் வேறுப்பாடுகள் காணப்படுகின்றன. பொதுஜன பெரமுன கொள்கை அடிப்படையில் செயற்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தடுக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகித்ததாக எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது அடிப்படையற்றது. நாளைதேர்தல் இடம்பெற்றாலும் போட்டியிட தயாராகவுள்ளோம். தேர்தலை விரைவாக நடத்துமாறு குறிப்பிடும் எதிர்க்கட்சிகள் தான் தேர்தலை ஏதாவதொரு வழியில் பிற்போடுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியபதவிகள் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும். கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (4)


### வேலையாட்கள் தேவை

எமது பிடவை நிறுவனத்துக்கு பிடவை வியாபாரம் செய்வதற்கு அனுபவம் உள்ள ஆண்/ பெண் விற்பனையாளர்கள் தேவை.

சிவகணேசன் Tex

41, பெரிய கடை, யாழ்ப்பாணம்

(15060)


# பெண் ஒருவரின் சடலம் வாவியிலிருந்து மீட்பு

மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு அருகிலுள்ள வாவியில் பெண்ணொருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வாவியில் பெண்ணொருவரின் சடலம் நீரில் மிதப்பதை கண்டு பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

. சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என கூறும் பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற உத்தரவை பெறுவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

## ஐ.எம்.எப்...

ளர்களது சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவும் சமுர்த்தி உள்ளிட்ட கொடுப்பனவுகளுக்காக 196 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. அரசின் இந்த மாதத்தின் மொத்தவருமானமாக 173 பில்லியன் ரூபா எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்தில் செலவினங்களுக்கு மேலதிகமாக 23 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

புத்தாண்டு காலம் என்பதால் இரண்டு மாதங்களுக்கான கொடுப்பனவுகளையும் வழங்கவுள்ளதால், அதிகளவான நிதி தேவைப்படுகின்றது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு தொகையினை பெற்றுக் கொள்ள திறைசேரியிடம் கோரியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (4)




### யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

### பங்குனி குளிர்த்தி பொங்கலும் மகர தீ மிதிப்பும்

### 27.03.2023 திங்கட்கிழமை

உற்சவ விபரம்

- அதிகாலை 5.00 மணி முதல் பொங்கல் வழிபாடுகள் ஆரம்பமாகும்.
- காலை 7.00 மணிப் பூசையுடன் தீ மிதிப்பிற்கான தீ மூட்டல் இடம்பெறும்.
- தொடர்ந்து விசேட குளிர்த்தி அபிஷேக வழிபாடுகள் இடம்பெற்று நண்பகல் 12.00 மணிக்கு மூலஸ்தானப் பூசையும் தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.
- பின்னர் மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெறும்
- மாலை 6.00 மணிக்கு தீ மிதிப்பு

குறிப்பு - குளிர்த்தி பொங்கலில் பங்குகொள்ள விரும்புகின்ற அடியவர்கள் பொங்கலுக்குரிய பொருட்களை தாமே எடுத்து வந்து காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை பொங்கல் வழிபாட்டில் ஈடுபடலாம்.

தெளிவே என் சிந்தனை (C-6243)

இங்ஙனம்

கௌரவ கலாநிதி இராஜ ஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்

முதன்மை பிரதம குருவும் - ஆதீனகர்த்தாவும்

(மேற்படி தேவஸ்தானம்)

### விசா சம்பந்தமான ஆலோசனைகள்

ஐரோப்பிய நாடுகளுக்கான Student visa, work visa/ Visit visa/ Permanent Resident visa தேவைப்படுபவர்கள் எங்களிடம் தொடர்பு கொள்ளவும்.

Hybrid International Hub (pvt) Ltd

076 250 0098/ 021 222 1265

(C-6233)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 1 ½ பரப்பு காணி விற்பனைக்கு.

- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம்
- A9 வீதியில் இருந்து 300 M தூரம்.
- லங்கா அசோக் லேடன் வாகன விற்பனை நிலைய பின்புறம் ,

பார்வையிடும் நேரம்:- காலை 8 - மாலை 6 வரை

தொடர்பு: 076 436 5814, 077 076 0389

(15059)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 076 097 3127

### கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் ம.நிறஞ்சன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் வேலாயுதம் மதிபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்கள் 25.03.2023 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 04.10.1940 மறைவு 25.03.2023

பிரிவுத்துயருடன்...

பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை. (C-6240)


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# வரி மாற்றங்களில் தலையிடப் போவதில்லை

## சர்வதேச நாணய நிதியம் உறுதியளிப்பு

(கொழும்பு)

**அரசாங்க வருமானம் பாதிக்கப்படாத வகையில் வரி மாற்றங்களில் தலையிடப்போவதில்லை என சர்வதேச நாணய நிதியம், இந்நாட்டின் தொழில் நிபுணர்களுக்கு உறுதியளித்துள்ளது.**



வோஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதி தலைமை அலுவலக அதிகாரிகள் மற்றும் இலங்கையின் தொழிற்சங்கங்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வரி சீர்திருத்தங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்களை தொடர்வது குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (நி)

## மதுபானம்; புகைபொருட்களுக்கு அதிக வரி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் படி, ஜூன் மாதத்தில் மதுபானம் மற்றும் புகையிலை மீதான வரிகளை அதிகரிக்க இலங்கை திட்டமிட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதமாக வரி வருவாயை உயர்த்துவதை இலக்காகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நாடு முழுவதும் சொத்து வரியை அறிமுகப்படுத்தவும் நிதி ப்ரி மாற்றங்களை மதிப்பாய்வு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 29 ஆவது வருடாந்த அறிவியல் அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 29 ஆவது வருடாந்த அறிவியல் அமர்வு நாளை மறுதினம் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழக பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது. இவ்வருட அமர்வு **"பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் மாற்று தொடர்பாடலுக்கான தந்திரோபாயங்களை கண்டறிதல்"** என்னும் தொனிப்பொருளில் நடைபெறுகிறது. முதல் நாள் நிகழ்வில் பேராசிரியர் வேல்நம்பியின் **"யாழ்ப்பாணத்தில் வணிக நிறுவனங்களின் சவால்களை எதிர் கொள்ளல்"** எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கின்றோம். (நி)

## மதுபோதையில் சாரத்தியம்; இனிமேல் பிணை இல்லை

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக பொலிஸ் பிணையில்லா வழக்குகளை தாக்கல் செய்யுமாறு போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பொலிஸ் நிலையங்களுக்கு பணிப்புரைவிடுத்துள்ளார்.

பொலிஸ் தலைமையக கட்டளைத் தளபதிகள், நிலையத் தளபதிகள் மற்றும் போக்குவரத்து திணைக்கள கட்டளைத் தளபதிகளை அழைத்து வாய்மொழியாக அறிவுறுத்தல்களை வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்த பிறகு, அவர்கள் இரண்டு முறைகளில் விசாரணைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

அதன் பின்னர் அந்த சாரதிகளை பொலிஸ் பிணையில் விடுவிக்க பொலிஸ் தலைமையகம் மற்றும் நிலையத் தளபதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், குறித்த வாகனத்தை வேறொரு நபருக்கு விடுவிப்பதற்கான திறன் பொலிஸாருக்கு இருந்தது.

எவ்வாறாயினும், விபத்துக்களை குறைக்கும் வகையில், மதுபோதையில் வாகனம் ஓட்டுவதை நிறுத்துமாறும், அவ்வாறு கைது செய்யப்படும் சாரதிகளை பொலிஸ் பிணை வழங்காமல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதிபொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (நி)

## புத்தாண்டு காலத்தை முன்னிட்டு மரக்கறி விலை மேலும் குறையலாம்

(கொழும்பு)

இலங்கையில் புத்தாண்டு காலத்தில் மரக்கறி விலைகள் மேலும் குறையலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேலியகொடை மெனிங்சந்தையில் மரக்கறிகளின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொழிற்சங்கத்தின் செயலாளர் சமிந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இலங்கையில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நுகர்வோர் மரக்கறிகொள்வனவுசெய்வதை மட்டுப்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 100-150 பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கம்

(கொழும்பு)

எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு 100 முதல் 150 பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று திறைசேரியின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்

குறிப்பிட்ட பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கும் இந்த நடவடிக்கை நாணயமாற்று விகிதம், அந்நிய செலாவணி கையிருப்பு மற்றும் பணவீக்கம் என்பவற்றில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மத்திய வங்கி, கைத்தொழில் அமைச்சு மற்றும் திறைசேரி என்பன கட்டுப்பாடுகள் நீக்கப்படும் பொருட்களின் அளவினைத் தீர்மானிக்கும். குறிப்பிட்ட பொருட்கள் கறுப்புச் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பதற்காகவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இதன் அடிப்படையில் கணினிகள், மொபைல் போன்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், எழுது பொருட்கள், உணவுப் பொருட்கள், ஆடை உற்பத்திக்கான மூலப் பொருட்கள் மற்றும் ஆடைகள், தோல் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், உதிரி பாகங்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், விவசாய உபகரணங்கள், குளியலறை பொருத்துதல்கள் மற்றும் பீங்கான் உள்ளிட்ட மின்னனு உபகரணங்கள், டைல்ஸ் என 100 முதல் 150 பொருட்கள் இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த நான்கு மாதங்களுக்குள் நீக்கப்படும்.

எனினும் வாகனங்களின் இறக்குமதி உடனடியாக அனுமதிக்கப்படாது, இது இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என திறைசேரி அதிகாரிகள் பிரபல நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ளனர். (நி)

## போராட்டங்கள் மூலம் எதையும் சாதிக்க முடியாது

### மக்கள் ஆதரவும் சர்வதேசத்தின் ஒத்துழைப்பும் உண்டென்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)



நாட்டு மக்களின் ஆதரவு தற்போது எனக்கு கிடைத்துள்ளதுடன், சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் சர்வதேச நாணயநிதியத்தின் நிதிப்பங்களிப்பும் கிடைத்துள்ளது. ஆகவே தொழிற்சங்க போராட்டங்களின் மூலம் எதையும் செய்துவிட முடியாது. இதை சம்பந்தப்பட்டவர்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு, தென்னிலங்கை ஊடகமொன்றிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளிடமும் சர்வதேச அமைப்புகளிடமும் பெறுகின்ற - செலுத்துகின்ற கடன்களுக்கு வரிவிதிப்பு மிக முக்கியமான ஒன்று. இதை தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுப்பவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியினரைப் போல் தொழிற்சங்கத்தினரும் பிளவுபட்டுள்ளனர். அவர்களில் ஒரு தரப்பினர் தமது சுயலாபத்திற்காக இவ்வாறான போராட்டங்களின் மூலம் மிரட்டல் விடுகின்றனர்.

இதன் மூலம் அவர்களால் எதையும் சாதித்துவிட முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை தாமதமடைவதற்கான சாத்தியம்

### கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மட்டக்குளி புனித ஜோன்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

2022 உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகளில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தினால் அடுத்த முறைக்கான கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

உலகளாவிய தொற்று நோயால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள சிறார்களின் கல்வியைப் பாதிக்கும் போராட்டங்களுக்குத் தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.


இந்நிகழ்வில் கல்வி அமைச்சருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்கும் கலந்து கொண்டார்.

ஏற்கனவே மே மாதம் அளவில் சாதாரண தரப் பரீட்சை நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இது மேலும் தாமதமடைவதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது உருவாகியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசிய கிண்ண தொடரில் விளையாட இந்திய அணி பாகிஸ்தான் செல்லாது

## இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் திட்டவட்டம்




16 ஆவது ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டது.

6 அணிகள் பங்கேற்கும் இப்போட்டித் தொடர் ஒருநாள் போட்டி முறையில் நடத்தப்படுகிறது. இதற்கிடையே பாகிஸ்தானுக்கு சென்று இந்திய அணி விளையாடாது என்று இந்திய கிரிக்கெட் வாரிய செயலாளரும் ஆசிய கிரிக்கெட் தலைவருமான ஜெய்ஷா தெரிவித்தார்.

ஆசியக் கிண்ண போட்டியை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. பாகிஸ்தானில் ஆசியக் கிண்ணப் போட்டியை நடத்தாவிட்டால் இந்தியாவில் நடைபெறும் உலக கிண்ண போட்டியை புறக்கணிப்போம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் மிரட்டல் விடுத்தது.

இந்த விவகாரம் தொடர்பாக ஆலோசனைகள், பேச்சுவார்த்தைகள் நடந்து வந்தன. சில நாட்களுக்கு முன்பு இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியங்களுக்கு இடையே கூட்டம் நடந்தது. இதில் ஆசிய கிண்ண போட்டியை எங்கு நடத்துவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்தியா் மோதும் போட்டிகளை பாகிஸ்தானில் நடத்தாமல் பொதுவான இடத்தில் நடத்துவதற்கான யோசனை குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது. இந்த நிலையில் ஆசிய கிண்ணப் போட்டியை பாகிஸ்தானில் நடத்தவும் இந்திய அணி பங்கேற்கும் போட்டிகளை மட்டும் பொதுவான இடத்தில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இலங்கை, இங்கிலாந்து, வங்காளதேசம், ஓமன் ஆகியவற்றில் ஏதாவது நாட்டில் இந் தியா மோதும் போட்டிகள் நடத்தப்படலாம் என்று தெரிகிறது.

பொதுவான இடம் பற்றிய முடிவு பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றால் அந்த ஆட்டமும் பொதுவான இடத்திலேயே நடத்தப்படும்.

இது தொடர்பாக இறுதி முடிவு விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் நடைபெற உள்ள ஆசிய கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்தில் விவாதித்து, இந்தியா மோதும் போட்டிக்கான பொதுவான இடம் குறித்து தேர்ந்தெடுக்கப்படலாம். (4)

# அயர்லாந்துக்கு எதிரான இறுதி ஒருநாள் போட்டி

## பங்களாதேஷ் வெற்றி



அயர்லாந்து அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் அணி ஒருநாள் போட்டிகளில் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்ற முதல் வெற்றி இதுவாகும்.

சில்ஹெட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, 28.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து 102 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 13.1 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை கடந்தது. இதனால், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2793

பரமன்




யதுஷா





சகானா




பிரணவன்




பிரியன்




சந்தியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

இணைந்த கரங்கள் அமைப்பின் ஊடாக நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை, தேவைப்பாடுடைய 202 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையின் பிரதான மண் டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி வைத்தியசாலையின் உதவி மருத்துவர் த.ஜெகதீஸ்வரன், மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஇராமச்சந்திரன், பாடசாலை அதிபர்கள் ,ஆசிரியர்கள்,நிதிப் பங்களிப்பாளர்கள் மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்திருந்தனர்.

இதன்போது மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, தாளையடி மற்றும் கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள 9 பாடசாலைகளைச் சேர்ந்த தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-30)



யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய பங்குனி குளிர்த்தி வெள்ளி ரத மஞ்சள் பால்குட பவனி நேற்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# யாழில் இலவச அரிசிப் பொதி வழங்கும் நிகழ்வு




(யாழ்ப்பாணம்)

வறிய மக்களுக்கான இலவச அரிசிப் பொதி வழங்கும் மாவட்ட மட்ட நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இன்றைய நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் (காணி), நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-33)



சுதுமலை தெற்கு சாவல்கட்டு வேம்படி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்றது. கும்பாபிஷேக நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். (படம்- சுபேசன்)

# அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம கோயில் மஹா கும்பாபிஷேகம் இன்று

யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்கு 1949 ஆம் ஆண்டு வைகாசி தினத்தன்று ஓர் அமெரிக்க இளைஞர் வந்தார்.அவரின் வருகையை எதிர் பார்த்திருந்த யோகசுவாமிகள் அவருக்கு சுப்பிரமுனியசுவாமிகள் எனும் நாம தீட்சை அளித்தார். அவரே நமது குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகள். தான் இலங்கைக்கு வந்து தங்கியிருந்த அளவெட்டி கிராமத்தில் சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தினை ஸ்தாபித்தார். இன்று உலகளாவிய ரீதியில் சிவப்பணி ஆற்றி வரும் ஹவாய் சைவ ஆதீனம், இமாலய கலைக்கூடம், இந்து பாரம்பரிய அறக்கட்டளை, Hinduism today பத்திரிகை ஆகியவற்றின் மூல ஊற்று ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் இருந்தே ஆரம்பமாகியது.

குருதேவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து அளவெட்டி கிராமத்தில் தனது வீட்டில் வளர்ப்பு மகனாக குருதேவரை ஏற்றுக் கொண்டு யாழ்ப்பாணத்து தமிழ் கலாசாரத்தை போதித்து சிவயோக சுவாமிகளை அறிமுகப்படுத்தியவர் கந்தையா செட்டியார் எனும் சைவப் பெரியார். ஆரம்பத்தில் சுப்பிரமுனிய ஆச்சிரமம் இவரது இல்லத்திலே செயற்பட்டு வந்தது.

பிற்காலத்தில் கந்தையா செட்டியாரின் மகன் விநாயகமூர்த்தி செட்டியாரும் அவரது துணைவியார் சிவயோக அம்மையாரும் ஆச்சிரம கைங்கரியங்களை தொடர்ந்து நல்ல முறையில் நடத்தி வந்தனர். 1967 ஆம் ஆண்டு குருதேவர் 75 அடியவர்கள் சகிதம் இலங்கை வந்து அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் தங்கியிருந்து அடியவர்களுக்கு ஆத்ம போதனையையும் ஆத்ம சாதனையையும் அருளினார். சில அமெரிக்க அடியவர்கள் அளவெட்டி ஆச்சிரமத்திலே தங்கியிருந்து ஆன்மிகப் பயிற்சியும் சமயப் பணியும் செய்து வந்தனர். 1967 இற்கு பின்பு வருடாவருடம் குருதேவர் இலங்கை, இந்திய நாடுகளுக்கு தலயாத்திரை செய்தார். அத்தருணம் அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் தங்கி அடியவர்களுடன் ஆத்ம சாதனையில் ஈடுபடுவார்.

1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தற்போது ஹவாய் சைவ ஆதீனத்தின் குருமகா சந்நிதானமாக இருக்கும் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளுக்கு சந்நியாச தீட்சை வழங்கினார். அத்தோடு மேலும் பல அமெரிக்க துறவிகளுக்கு தீட்சை வழங்கினார். இந்த தெய்வீக நிகழ்வினை குறிக்கும் வகையில் அதே ஆண்டு ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் பசுபதீஸ்வரர் திருக்கோவிலை



குருதேவர் ஸ்தாபித்தார். சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளை சில காலம் அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் தங்கி ஆத்ம சாதனை செய்யுமாறு பணித்தார். சற்குரு போதி நாத வேலன் சுவாமிகள் குருவின் அருள் ஆணைப்படி தினசரி கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில், நல்லூர் கந்தசுவாமி கோயில், கொழும்புத்துறை யோகர் சுவாமி சமாதித் திருக்கோயில், கைதடி மார்க்கண்டு சுவாமிகளின் ஆச்சிரமம் மற்றும் யாழ் சிவதொண்டர் நிலையம் ஆகியவற்றுக்கு சென்று வழிபாடு, தியானம், ஆத்மசாதனை ஆகியவற்றை செய்து வந்தார்.

1979 ஆம் ஆண்டு குருதேவர் ஆச்சிரமத்திற்கு அருகில் 2 மாடிகள் கொண்ட கட்டடத்தினை கொள்வனவு செய்து அதில் சுப்பிரமுனிய ஆச்சிரமம் செயற்படத் தொடங்கியது. அப்புதிய ஆச்சிரமத்தை பரிபாலனம் செய்வதற்காக அளவெட்டி அடியவர்களைக் கொண்ட பரிபாலனசபை உருவாக்கப்பட்டது. முன்னர் சுப்பிரமுனிய ஆச்சிரமம் இயங்கி வந்த இடத்தில் தொடர்ந்தும் பசுபதீஸ்வரர் திருக்கோயில் நித்திய பூசை இடம்பெற்று வந்தன. சனி, ஞாயிறு தினங்களில் மாணவர்களுக்கு சமய, ஆங்கில வகுப்புக்கள், பண்ணிசை, சங்கீதம், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம், யோகாசனம் ஆகியவை இலவசமாக கற்பிக்கப்பட்டன. குருபூசைகள் மற்றும் விசேட நாட்களில் அன்னதானமும் கிரமமாக நடைபெற்றன. வருடா வருடம் குருதேவர் அடியவர் சகிதம் ஆச்சிரமத்திற்கு வந்து தலயாத்திரை மற்றும் சமய, சமூக பணிகள் ஆற்றி வந்தார். 1983 ஆம் ஆண்டு தை மாதம் 5 ஆம் திகதி, குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் 56 ஆவது ஜெனன தினம் அளவெட்டியில் மிகவும் விமர்சையாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மாலை குருதேவர் பூசித்து வந்த ஸ்ரீ சாந்திலிங்கப் பெருமானை அமெரிக்காவிலிருந்து கொண்டுவந்து கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் பிரதிஷ்டை செய்தார்.

1986 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜூலை இனக்கலவரத்தின் பின்னர் குருதேவர் இலங்கைத் தமிழர் அகதி நிவாரண நிதி எனும் நிதியத்தை நிறுவி பாதிக்கப்பட்ட ஏராளமான மக்களுக்கு நிவாரண உதவி, வீடு கட்டிக் கொடுத்தல் என்பவற்றை செய்தார். இவ்வாறு அளவெட்டி கிராமத்தில் ஓர் ஆத்மிக, சமய, சமூக ஸ்தாபனமாக செயற்பட்டு ஆயிரக்கணக்கான மாணவர்களை நல்வழிப்படுத்தி பெரியவர்களை ஆத்மிகத்தில் ஆற்றுப்படுத்தி வந்த ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமப் பணிகள் 1986 ஆம் ஆண்டு அளவில் போர்ச்சூழல் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்து 1987 ஆம் ஆண்டு விமானக்குண்டு வீச்சில் ஆச்சிரமம் பலத்த சேதமடைந்தது. இதனால் மூன்று தசாப்தங்களாக ஆச்சிரமப் பணிகள் தடைப்பட்டு இருந்தது. இருப்பினும் குருதேவரால் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம பசுபதீஸ்வர ஆலய பூசைகள் தொடர்ந்தும் நடைபெற்று வந்தன.

2015 ஆம் ஆண்டு சற்குரு போதி நாத வேலன் சுவாமிகள் 32 வருட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் அளவெட்டிக்கு வந்து ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம அறக்கட்டளைப் பணிகளை மீள ஆரம்பித்து வைத்தார். 2018, 2019 ஆண்டு அடியவர் சகிதம் அளவெட்டிக்கு வந்து பசுபதீஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகளை ஆரம்பித்து வைத்தார். 2022 ஆம் ஆண்டு தைப்பூச நன்னாளில் அடிக்கல் நாட்டப்பட்ட திருக்கோயில் இந்திய, இலங்கை கலைஞர்களின் கைவண்ணத்தில் கலைக் கோயிலாக உருவாகி 2023 பங்குனி 13 ஆம் நாள் மார்ச் 27 இன்றைய தினம் மஹா கும்பாபிஷேகம் காண்கின்றது.

**ரிஷி தொண்டுநாத சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டம் கனடாவில் காந்தி சிலை அவமதிப்பு




(ஒன்டாரியோ)
இங்கிலாந்து, அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகங்கள் முன்பு காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டங்கள் நடத்தினர். காந்தி கையில் உள்ள தடியில் காலிஸ்தான் கொடியை பறக்க விட்டுள்ளனர்.

பஞ்சாப்பில் காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் அம்ரித்பால் சிங்கை பொலிஸார் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இங்கிலாந்து, அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகங்கள் முன்பு காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டங்கள் நடத்தினர்.

இந்த நிலையில் கனடாவின் ஒன்டோரியோ நகரில் உள்ள மகாத்மா காந்தி சிலையை காலிஸ்தான் ஆதரவாளர்கள் சேதப்படுத்தியுள்ளனர். 6 அடி உயரமுள்ள வெண்கலத்தால் ஆன காந்தி சிலையின் முகம் சிதைக்கப்பட்டுள்ளது. மேலும் சிலை மீது பெயிண்டை ஊற்றியுள்ளனர்.

சிலையின் அடிப்பாகத்தில் இந்திய அரசு, பிரதமர் மோடிக்கு கண்டனம் தெரிவித்து வாசகங்களை எழுதியுள்ளனர். காந்தி கையில் உள்ள தடியில் காலிஸ்தான் கொடியை பறக்கவிட்டுள்ளனர். (நி)

# அமெரிக்காவில் வரலாறு காணாத பனிப்புயல் பலி எண்ணிக்கை 26 ஆக உயர்வு



(வோஷிங்டன்)
அமெரிக்கா தற்போது வரலாறு காணாத அளவுக்கு மோசமான வானிலையை சந்தித்து வருகிறது. அங்கு பெரும்பாலான மாகாணங்கள் பனிப்புயல் பாதிப்பை எதிர்கொள்கின்றன. கலிபோர்னியா மாகாணத்தில் சமீபத்தில் பனிப்புயல் வீசியது. இதில் பல வீடுகள் மற்றும் அலுவலகங்களின் கண்ணாடிகள் உடைந்து சேதம் அடைந்தது. இந்த பனிப்புயல் காரணமாக சான்பிரான்சிஸ்கோவின் வீதிகளில் காணும் இடமெங்கும் பனியால் மூடப்பட்டு இருந்தது. அங்கு சாலைகளில் நிறுத்தியிருந்த கார்கள் மறையும் அளவுக்கு பனி படர்ந்திருந்தது.

இதனால் நகரின் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மிசிசிபி மாகாணத்தில் புயலுடன் கூடிய கனமழை பெய்யும் என அமெரிக்காவின் வானிலை ஆய்வு மையம் சமீபத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி கடந்த வெள்ளிக்கிழமை மிசிசிபி மாகாணத்தில் புயலுடன் கூடிய கனமழை பெய்தது. இதில் அங்குள்ள பல்வேறு நகரங்கள் வெள்ளக்காடாக காட்சியளித்தன. ஏராளமான மின்கம்பங்கள் சரிந்து விழுந்ததால் அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. எனவே பல நகரங்கள் இருளில் மூழ்கியது. மேலும் பல இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்து போக்குவரத்து பாதிப்பும் ஏற்பட்டது. இதனையடுத்து தயாராக இருந்த மீட்பு குழுவினர் விரைந்து செயல்பட்டு மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அவர்கள் வெள்ளத்தில் சிக்கி இருந்த பொது மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த பயங்கர புயலால் இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் சிலர் மாயமானதால் அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. எனவே பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது. (நி)

# அணு ஆயுதங்களால் செயற்கை சுனாமி வடகொரியாவின் பதறவைக்கும் ஆராய்ச்சி

(பியாங்யாங்)
வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே தீராப்பகை நிலவுகிறது. வட கொரியா தனது அணு ஆயுதங்களால் தென் கொரியாவை அச்சுறுத்தி வருகிறது.

இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்ள தென்கொரியாவுக்கு அமெரிக்கா பெரும் பக்கபலமாக இருந்து வருகிறது. அந்த வகையில் அமெரிக்கா மற்றும் தென் கொரியா படைகள் கடந்த வாரம் கொரிய தீப கற்பத்தில் பிரமாண்ட கூட்டுப் போர் பயிற்சியில் ஈடுபட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், அமெரிக்கா மற்றும் தென் கொரியாவை அச்சுறுத்தும் விதமாக வட கொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகள்ள நடத்தி வருகிறது.

இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நீடித்து வரும் நிலையில் தற்போது வடகொரியா கடலுக்கு அடியில் புதிய அணு ஆயுதத்தை சோதித்து அதிர வைத்துள்ளது.

நாட்டின் தென் பகுதியில் உள்ள ஹம்க்யோங் மாகாணத்தில் கடலுக்கு அடியில் ஆயுத சோதனையை வெற்றிகரமாக நடத்தியதாக வட கொரியா அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த நாட்டின் அரசு ஊடகமான கேசிஎன்ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கடலுக்கு அடியில், செலுத்தப்பட்ட ஆயுதம் 80 முதல் 150 மீற்றர் ஆழத்தில் சுமார் 60 மணி நேரம் பயணம் செய்து பின்னர் வெடித்து சிதறியது. இதன் மூலம் செயற்கை சுனாமியை [illegible] னோம். தலைவர் கிம் ஜாங் உன்னின் மேற்பார்வையில் இந்த சோதனை நடந்தது. சோதனை வெற்றிகரமாக அமைந்தது அவர் மகிழ்ச்சி அடைந்தார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனையால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது. இதனிடையே வடகொரியாவின் இந்த சோதனைக்கு தென் கொரியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டின் ஜனாதிபதி யூன் சுக் இயோல் கூறுகையில் வட கொரியாவின் இதுபோன்ற ஆத்திரமூட்டும் செயலுக்கு அது நிச்சயமாக உரிய விலையை கொடுக்க நேரிடும்" என தெரிவித்தார். (நி)

# அமெரிக்[...] ஈரான் [...]

(டெஹ்ரான்)
அமெரிக்கா மேற்[...]
கொடுக்கத் தயாரா[...]
படைகள் தெரிவித்து[...]

24 மணி நேரத்தில் சிரியாவில் நடந்த ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களில் போராளிகள் பலர் உயிரிழந்துள்ளதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சிரிய[...]
இருப்புக்[...]
கள் குற[...]
பதிலடி [...]
தம்மிட[...]
எச்சரித்[...]
சிரிய[...]

# நியூயோர்க் நகரில் உ[...] 190 பில்லிய[...]



(நியூயோர்க்)
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 22 மாடிகளைக் கொண்ட "பிளாடிரான்" என்ற வானளாவிய கட்டடம் உள்ளது. கடந்த 1902 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட

இ[...]
மு[...]
மி[...]
ய[...]
க[...]

# ஜப்பானில் பற[...] பல லட்சம் [...]

(டோக்கியோ)
ஜப்பானின் அமோரி மாகாணத்தில் உள்ள கோழிப் பண்ணைகளில் ஒரு பண்ணையில் உள்ள கோழிகளுக்கு பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்தப் பண்ணை மற்றும் அதிலுள்ள உபகரணங்கள் கிருமி நீக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும், அதனை சுற்றிலும் சுமார் 3 கிலோமீற்றர் தூரம் வரையில் உள்ள பகுதிகளில் கோழிகளையும் முட்டைகளையும் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பறவைக்காய்ச்சல் அதிவேகமாக பரவி வருவதால், நாட்டின் மற்றைய பகுதிகளில் உள்ள கோழிகளை

பா[...]
ை[...]
கே[...]
தீ[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவான கைபேசிப் பயன்பாடு;

## மையோபியா நோயினால் பெருமளவானோர் பாதிப்பு

(கொழும்பு)

**கடந்த 3 வருடத்துக்குள் உலகில் அதிகளவானோர் கிட்டப்பார்வை எனப்படும் மையோபியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியிடப் பட்டுள்ளன.**

கொரோனா காலத்தில், அதிக மானோர் மத்தியில் கணினி மற் றும் கைப்பேசி பாவனை அதிகரித் தமை மற்றும் அதிக நேரம் கண் சிமிட்டாமல் இருந்தமை காரண மாக பலர் இந்தத் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கிட்டப்பார்வை எனப்படும் மையோபியா நோய் தொடர்பில் கருத்துரைத்த, கண் சிகிச்சை தொடர்பான விசேட மருத்து வர் முதித்தா குலதுங்க, கொவிட் -19 பரவல் காலப்பகுதியில் வீடு களிலேயே இருந்த மக்களிடம் கைப் பேசி பயன்பாடு அதிகரித்ததாக சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## சித்தராயர் வழிவந்த சித்தவைத்தியர் குணரத்தினம் முத்துபிள்ளை தம்பதிகள் பெற்றெடுத்த முத்துக்கள் அத்தனையும் சித்த வைத்தியரே!



டாக்டர் திருமதி
தெய்வானைப்பிள்ளை
பூலோகசுந்தரம்



டாக்டர் திருமதி
கந்தசாமி
சிவக்கொழுந்து



டாக்டர் குணரத்தினம்
செல்வத்துரை
(ஓய்வு பெற்ற அதிபர்,
பிரபல வைத்தியர்)





டாக்டர் திருமதி செல்வத்துரை
பொன்னம்மா
(வைத்திய பூபதி
பாரம்பரிய வைத்தியர்)



டாக்டர் குணரத்தினம்
திருச்செல்வம்
(வைத்தியர்)



டாக்டர் பூலோகசுந்தரம்
கயிலநாதன்
(D.A.M.S.(CEY))
"சகலசிராபிஷேக வைத்திய சூரி",
முன்னாள் முகாமையாளர்,பறாளாய் விநாயகர் சுழிபுரம்.



டாக்டர் செல்வத்துரை
வரதரத்தினம்



டாக்டர் செல்வத்துரை
இராசரத்தினம்

**நூறாவது அகவை நினைவலைகள்**
**அமரர் குணரத்தினம் சங்கரப்பிள்ளை**
**பிரபலசித்தஆயுள்வேதவைத்தியர்**
**பதிவிலக்கம் - 4922**
தோற்றம் - 27-03-1923
மறைவு - 10-04-2004

சுழிபுரம் மண் பெற்றெடுத்த பண்டிதமணியின்
வழிவந்த -சங்கரதிலகமே
பாரம்பரிய மானதன் மூதாதைகள்
தந்தவைத்தியத்தை - வளர வைத்தவரே
சித்தாயர் வழிவந்தசித்தவைத்தியத்தைசீர்
பெறச் செய்த - முத்துக்களில் ஒருவரே
குருத்துவத்தையும் மருத்துவத்தையும்
ஒருசேரமிளிர - வைத்தவரே
தெய்வவழிபாட்டால் இறையன்பையும் சீர் குண
த்தால் பிறர் - அன்பையும் பெற்றசீராளனே
இத்தகைய விற்பன்னர் எம்முடன்
இன்றில்லையே என்பதில்
- ஏங்கித் தவிக்கின்றோம் ஐயா

**பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்**
**பூட்டப்பிள்ளைகள்,உற்றார்,உறவினர்கள்.**

இன்றைய பொருளாதாரம் நெருக்கடிகாலத்தில் கிராமத்தில் உள்ள (வீட்டுக்கு அருகில் உள்ளபாடசாலை) பாடசாலையில் பிள்ளை களைகல்விகற்று,மற்றும் கிராமத்தில் உள்ள மூலிகைகளை பயன்படுத்தினால் நாம் மிகமிககொடியநோயில் இருந்து நீண்ட ஆயுளுடன் வாழ்ந்துகொள்ளலாம்.

பற்பல ஆயிரக்கணக்கானபாடல்களில் மக்களின் உடல் நலத்திற்கானஅரியகுறிப்புக்களைஉள்ளடக்கியநம் முன்னோரான சித்தர் பெருமக்கள் ஓலைச் சுவடுகளில் எழுதிவைத்திருக்கிறார்கள். ஒருபாடலைப் பார்ப்போம்.

> காலையின் இஞ்சிகடும்பகல் சுக்கு
> மாலையில் கடுக்காய் மண்டலம் உண்ணி
> கோலை ஊன்றிக் குலுங்கிநடப்பவர்
> குமரனாகி குலாவரதுப்பனே!

காலையில் வாதநாடிக்கு இஞ்சியும்,பகலில் பித்தநாடிக்கு சுக்கும்,மாலையில் சிலேத்தும நாடிக்குக் கடுக்காயும் தினமும் தவறாமல் உணவில் சேர்த்து உட்கொண்டுவந்தால் நோய்கள் நெருங்கா ஊன்று கோலை கொண்டு நடக்கும் அளவுக்குத் தளர்ச்சியு டையவர்கள் கூட,கோலைவீசித்தூர எறிந்துவிட்டு இளமைத் துடிப்புடன் நடைபோடுவார்கள் என்பதுபாடலின் கருத்தாகும். ராகிஎனப்படும் கேழ்வரகு மிகுந்த சத்துள்ள ஒருதானியம். இதைநாம் நாள்தோறும் உணவில் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. வேப்பிலைக் கொழுந்து சிலவற்றை அன்றாடம் காலையில் மென்று உட்கொண்டு வந்தால்,உடல் நலத்தைப் பற்றியகவலையே இல்லாமல் ஆரோ க்கியமானநல்வாழ்வைப் பெறமுடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தேன் - காலையில் சாப்பிட்டால் உடல் மெலியும். இரவில் சாப்பிட்டால் உடல் பருக்கும். எள் - எள்ளுடன் வெல்லம் சேர்த்து உருண்டைகளாக்கி உட்கொண்டுவந்தால் இளைத்த உடல் தேறும். இந்த எள்ளிலிருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெயைப் பயன்படு த்தினால் பருமனான உடல் இளைக்கும். எள்ளுக்கும், எண்ணெய் க்கும் வித்தியாசம் உண்டு. கொள்ளினைஉடலில் சேர்த்துக் கொண்டால் உடம்பு இளைக்கும். "இளைத்தவனுக்கு எள்ளும், கொழுத்தவனுக்கும் கொள்ளும்"என்னும் பழமொழி இங்கே நோக்கத்தக்கது. "வேர்கடலை (நிலக்கடலை) யைத் தோல் நீக்கிச் சாப்பிட்டால் பித்தம் மிகும். அதேவேர்க் கடலைப் பருப்பின் தோலைநீக்காமல் உள்ளே இரு பருப்புக்களுக்கிடையேயுள்ள மூக்கைமட்டும் நீக்கிவிட்டுசாப்பிட்டால் பித்தத்தின் தொல்லை இராது". "இளநீரை,பொதுவாகஉணவுக்குமுன் சாப்பிட்டால் பசிநீங்கு வதல்லாமல் குன்மம் ஏற்படும். மாலையில் சாப்பிட்டால் கிருமிகள் அகலும்".

"சாப்பிட்டபின்னர் இளநீரைச் சாப்பிட்டால் வாதம்,பித்தம்,கோபம் தணியும்,பித்ததோஷம் அகலும்,மலம் தாராளமாகக் கழியும். நன்குபசிஏற்படும் நோய் நீங்கும். உடலில் பளபளப்புமிகும். வெப்பத்தினால் ஏற்படும் வயிற்றுப் போக்கிற்கு இளநீர் அருந்தினால் வயிற்றுப்போக்குபேதிநிற்கும். அதே இளநீரைவெறும் வயிற்றில் உணவிற்குமுன் துணியில் வடிகட்டிகுடித்தால் பேதியாகும்."

**வீட்டில் மூலிகைகள் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்**

- எமதுபாரம்பரியபாதுகாக்கப்பட்ட இனியநறுமணத்துடன் கூடிய காற்றோட்டம் கிடைக்கும்: வீட்டுச் சூழல் தெய்வீகத் தன்மை பெறும் விஷ ஜந்துக்கள் வீட்டில் அணுகாது.
- வீட்டுச் சூழல் மிக அழகாக காட்சியளிக்கும் மூலகைத் தோட்டத்தில் உலாவி தோட்டத்தை ஒழுங்கமைத்தல் நல்லபொழுது போக்காகஅமையும். இதனால் மன அழுத்த ங்கள் நீங்கி மன மகிழ்ச்சியும் ஏற்படும்.
- மூலிகைகளைசிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை இனம் காணக்கூடியதாகஅமைவதுடன் மூலிகைகளின் வளர்ச்சி பற்றியகல்வி அறிவுவளர்ச்சிபெறும்.
- தினமும் விதவிதமான இயற்கையான சுத்தமான (கிருமி நாசினிகள் அடிக்காத) சமைத்துஉண்ணக்கூடிய மூலிகை களை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் நோய் இன்றி ஆரோக்கியமாக வாழலாம்.
- வீட்டிற்கு வருபவர்களுக்கும் கொடுத்துநல்லுறவைவளர்த்துக் கொள்ளலாம்.
- சாதாரணநோய்கள் ஏற்பட்டால் உடன் வீட்டு மூலிகை களைபறித்து இலகுமருத்துவம் செய்துகுணமாகலாம்.
- இதனால் நோய்கள் உடன் குணமாகின்றது. வீண் அலைச்சல் தவிர்க்கப்படுகின்றது. நேரமும் பணமும் மீதியாகின்றது. (சிலநோய்களுக்குஉடன் வைத்தியசாலை க்கு சென்றுமருத்துவ ஆலோசனைகளைபெறுதல்வேண்டும்.) இடவசதிக்கு ஏற்றவாறு மூலிகைகளைவளர்த்து விற்று பணம் சேர்த்துக் கொள்ளலாம்.

**மூலிகைகளின்சிறப்புகள்:-**

- "அறிவுக் கனியாகும் வாழைக்கனி" மிக இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கும் வாழைப்பழம்,நம் உடலுக்கு நல்லபோசுஷணையைத் தரும். அதனால் அறிவுவளர்ச்சிக்கு ஏற்றது.
- **"அளவுக்குமிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்"** அதிகவிருப்பமானஉணவுஎன்றாலும்,சுகமாக்கும் மருந்து என்றாலும்,விரும்பியசெயல் எதுவென்றாலும் அளவுக்கு மிகுதியாகப் போனல் அதுஅமிர்தமாக இருக்காது. நஞ்சாக மாறிவிடும்.
- **"வல்லாரைஉண்டால் வல்லாரைவெல்லலாம்"** வல்லாரைஎன்ற மூலிகையைஉணவுடன் சேர்த்து உண்பதனால் ஞாபகசக்திஅதிகரிப்பதுடன்,உடற்பலமும் அதிகரிக்கும். இதனால் வலிமையுள்ளவனை வெல்லலாம்.
- **"பெருங்காயம் இல்லா உணவும் பெரியோர் இல்லா வீடும் ஆகாது"** வீட்டில் பெரியோர் இருப்பதுஎவ்வளவுமுக்கியமோ அதுபோல் உணவில் பெருங்காயமும் கூடுதலாகசேர்க்க வேண்டும். வாய்வை அகற்றி ஜீரனத்தைக் கூட்டும்.
- **"சுக்கைப் போல் மருந்தில்லைசுப்ரமணியம் போல் தெய்வமில்லை"** கருணைவள்ளலான சுப்ரமணியக் கடவுள் எம்மைக் காப்பதுபோல்,மருந்துகளில் சுக்கு இல்லாமல் செய்வது மில்லை. சுக்கு தேநீர் குடித்தல் நல்லது
- **"பத்துமிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்"** பகைவன் வீட்டில் உண்பதனால் ஏதாவதுநச்சுத் தன்மை யிருந்தாலும் பத்துமிளகுவிஷத்தைப் போக்கும். அதனால் எமதுஉணவிலும் மிளகுசேர்ப்பதனால் அதிலுள்ள நச்சினைப் போக்கும்.
- **"ஆலும் வேலும் பல்லுக்குறுதி"** ஆலமரபட்டையும்,வேல் என்பதுவேம்பு அல்லது வெள் வேலமரம். அதன் பட்டையும் பற்களுக்குபாதுகாப்பு அளிக்கக்கூடியது
- **"கறிவேப்பிலையோ-வேப்பிலைகாய்கறிக் கெல் லாம் தாய்ப்பிள்ளை"** காய்கறி எல்லாவற்றையும் சமைக்கும் போதும் நாம் கறி வேப்பிலைசேர்க்கிறோம்.
- **"பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையைஎறியாதே"** விலை கூடியபொன்னைவிட கீரைவகையானது. மதிப்பு கூடுதலானது. அதுஉண்பதால் உடலுக்கு அதிக போச ணையைத் தரும்.

**எமக்கு உற்றதுணை யார்?**

எமக்கு உற்ற துணையாக இருப்பதுயார் என்றவுடன் மயக்கம் ஏற்படும். ஒருவர் சொல்லுவார் தந்தை,தாய்,மனைவி,உறவினர்கள்,கடவுள் என்றநீண்டவரிசையில் ஒருவரை ஒருவர் சொல்லிவிடலாம் எனபலர் நினைப்பர். ஆனால் ஆன்மீக சிந்தனையில் எமது உடம்புதான் எமக்கு உற்றதுணையாகநவீனகருத்தாகும். எமக்கு உடல் ஆரோக்கியம் சிறப்பால் வாழ்ந்தால் நாம் நீண்டகாலமாக உயிர் வாழமுடியும். இதனால் எமக்கு உற்றதுணை உடம்பாகும். உடம்பு உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தால் எமது உயிர் நீண்ட காலமாக உடம்பில் தங்கியிருக்கும்.

வைத்தியமேதை சித்தராஜர் வழியில் வந்த அமரர் குணரத்தினம் சங்கரப்பிள்ளைஅவர்களின் பேரன் ஆகிய கிருபாரத்தினம் துரைரத்தினம் (துவாரகன்) சித்தவைத்தியத் துறையிலும்,விளையாட்டுதுறையிலும் துடுப்பாட்டத்திலும் குறிப்பாக "வீரர்களின் போர்" துடுப்பாட்டத்தில் மிகசிறந்த வீரராக கடந்த மாதம் மகாஜனாக் கல்லூரி- ஸ்கந்த வரோதயக் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்றவருடாந்த போட்டியில், ஆறு விக்கெற்று களைவீழ்த்தியும்,50 ஓட்டம் (ஆட்டமிழக்காமல்) பெற்றார். போட்டி சமநிலைக்கு கொண்டுவரப்பட்டதற்கு இவரே காரணகர்த்தா ஆவார்.

அன்புள்ளங்களே! பாரம்பரியசித்தவைத்தியர் அமரர் சங்கரப் பிள்ளைஅவர்களினால் செலவில்லாத இயற்கை மூலிகைமருத்துவக் குறிப்புகள் அடியேன் தங்களுக்கு அறியத் தருகிறேன். மற்றும் சகல விதமானநோய்களையும் தீர்க்கக் கூடிய மருந்துகள் எம்மிடம் உள்ளது. முக்கியமானநாடிபார்ப்பதில் மேலேஉள்ளவர்கள் எனக்குகற்றுத்தந்தபடியால் நான் சுழிபுரத்தில் வாழ்ந்ததுபோல் சுன்னாகத்திலும் மிகச் சிறப்பாக வைத்திய சேவை செய்துவருகிறேன். பிள்ளைச் செல்வங்கள் இல்லாதவர்கள் கூட எமது மருத்துவசிகிச்சை மூலம் பலபேர் மிகவும் சந்தோசத்துடன் வாழ்கின்றார்கள்.

(15044)

அமரர்.செல்லத்துரைஞாபகார்த்தவைத்தியசாலை
சுன்னாகம் NSB Bank வீதி, உடையார் வளவு
சுன்னாகம்.

077 954 7589

செ.கிருபாரத்தினம், ஆயுள்வேதவைத்தியர்,
செயலாளர், பாடசாலை அபிவிருத்திக்குழு,யா/மயிலணிமகா வித்தியாலயம்
முன்னாள் இந்தியா ஈழ எதிரியர் மறுவாழ்வு கழகம்
நல்லாயன் ஆராய்ச்சி பொறுப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வின்



சிறு வயது முதல் இருந்ததொரு ஆசையின் காரணமாக எப்படியோ வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தில் இணைந்துகொண்ட நீங்கள் உங்களுக்கான வாய்ப்பு வரும்வரை பரபரப்புடன் காத்துக் கொண்டிருக்கிறீர்களா? இல்லையெனில் உங்களுக்கு தெரிந்த அல்லது உங்களுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் அவ்வாறு காத்துக்கொண்டு இருக்கின்றாரா? அப்படியானால் இக்கட்டுரை உங்களுக்கானது அல்லது அவ்வாறு காத்திருப்பவருக்கானது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தேச எல்லைகள் ஊடாக இடம்பெறும் புலம்பெயர்வானது தொழிலுக்காக, கல்விக்காக, சுற்றுலாவுக்காக, சுகாதார வசதிகளுக்காக, நிரந்தரமாக குடியேறுவதற்காக அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக இடம் பெறக்கூடும்.

இந்தக் கட்டுரையுடன் தொடர்புடையதாக மார்ச் மாதம் 19 ஆம் திகதியும் 20 ஆம் திகதியும் 26 ஆம் திகதியும் பிரசுரமாகிய கட்டுரைகள் ஊடாக தொழிலுக்காக வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்னர் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளன. இக்கட்டுரைத் தொடர் ஊடாக எதிர்பார்க்கப்படும் விடயம் யாதெனில் வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்பவர்களுக்கு தேவையான முக்கியமான தகவல்களை வழங்குவதாகும். மேலும், இங்கு குறிப்பிடப்படும் சில விடயங்கள் அனைத்து புலம்பெயர்பவர்களுக்கும் பொதுவானதாக இருப்பதால் நீங்களும் இந்த கட்டுரை தொடரை வாசித்து முறையான புலம்பெயர்வு பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

## புலம்பெயர்வின் போது

### புலம்பெயர் ஊழியர்களின் தொழில்சார் பிரச்சினைகள் / கோரிக்கைகள் தொடர்பான மத்தியஸ்த செயன்முறைக்கு ஏதுவாக நடவடிக்கை எடுத்தல்



வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் புலம்பெயர் ஊழியர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை தலைமை அலுவலகத்திற்கும் மாகாண / மாவட்ட புலம்பெயர்வு வள நிலையங்களுக்கும் நேரடியாகவே முன்வைக்க முடியும் என்பதுடன் அச்சேவைகளை www.slbfe.lk எனும் பணியகத்தின் இணைய தளத்தின் ஊடாக இணையவழி முறையிலும் (Online) முன்வைப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு புலம்பெயர் ஊழியரின் வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் தொடர்பான தகவல்கள் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினால் பணியகத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இதன் மூலம் புலம்பெயர் ஊழியர் சேவையில் ஈடுபட்டுள்ள போதே அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பணியகத்திற்கு தகவல் வழங்குவதன் மூலம் அவர்களின் தொழிலுக்கு பாதுகாப்பு வழங்கும் விடயம் இலகுவானதாக அமையும்.

### இலங்கைக்கு வெளியே தொழில் புரிந்த பின்னர் நாடு திரும்பும் இலங்கையர்களை மீளிணைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

உரிய முறையில் தொழில் ஒப்பந்தத்தை நிறைவு செய்த பின்னர் வருகை தருகின்ற புலம்பெயர் ஊழியர்களுக்கு எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆலோசனைகளையும் கடன் வசதிகளையும் வழங்குவதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கமைவாக அரச வங்கிகளின் ஊடாக குறைந்த வட்டி வீதத்தின் கீழ் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் ஊழியர்களுக்கு பதிலாக அவர்களினால் முன்மொழியப்படுகின்ற அவர்களின் பிரதிநிதிகளுக்கு இந்தக் கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளமுடியும். இத்தகவல்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் http://www.slbfe.lk/page.php?LID=2&MID=&PID=112?&NID=& எனும் இணையப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| வெளிநாட்டு தூதரதம | சம்பந்தப்பட்ட தூதரகத்தின தொழில் மற்றும் நலன்புரி பிரிவின் தொலைபேசி இலக்கம் | வெளிநாட்டு தூதரகத்தின் மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|
| ஐக்கிய அரபு இராஜ்சியம் - அபுதாபி | 00-971-2-6316444 | slemb.abudhabi@mfa.gov.lk |
| பஹ்ரைன் | 00-973-17008410/ 17660408 | slemb.bahrain@mfa.gov.lk |
| ஐக்கிய அரபு இராஜ்சியம் - துபாய் | 00-971-43986535 | condubai@slcgdxb.ae |
| இஸ்ரேல் | 00-972-35277635/8 | slemb.telaviv@mfa.gov.lk |
| ஜோர்தான் | 00-962-65820611/2 | slemb.amman@mfa.gov.lk |
| ஜித்தா – சவுதி அரேபியா | 00-966-126065414/ 6063442/6065772 | slcg.jeddah@mfa.gov.lk |
| குவைத் | 00-965-25339140/42, 25354633/36/38/11 | slemb.kuwait@mfa.gov.lk |
| லெபனான் | 00-961-5769585 00-961-5766294 | slemb.beirut@mfa.gov.lk |
| மலேசியா | 00-60-3-42568987, 42571394 | slhc.kl@mfa.gov.lk slhcmy@gmail.com |
| மாலைத்தீவு | 00-960-3322845/ 3313546 | slhc.male@mfa.gov.lk |
| ஓமான் | 00-968-24697841/24697842 | slemb.muscat@mfa.gov.lk emb.omans@gmail.com |
| கட்டார் | 00-974-44677627/647 | slemb.doha@mfa.gov.lk |
| ரியாத் - சவுதி அரேபியா | 00-966-114608232/5 | slemb.riyadh@mfa.gov.lk |
| கொரியா | 00-82-27352966/7 | mission@slembkr.org |
| சிங்கப்பூர் | 00-65-62544595/6/7 | slhcs@lanka.com.sg |

மேற்படி இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் அவசர சந்தர்ப்பம் ஒன்றின்போது புலம்பெயர்ந்தவருக்கும் புலம்பெயர்ந்தவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் சம்பந்தப்பட்ட தனது உறவினருக்கு உதவியினை பெற்றுத்தருவதற்கு வாய்ப்பு கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடாக ஒரு சிறந்த எதிர்காலம்


ගොඩ යන්න, හරි පාරෙන් රට යන්න
சரியான வெளிநாட்டு வழி வெற்றிக்கான வழி

விளக்கம் அளிப்பதற்கு வசதியாக நாம் புலம்பெயர்வினை மூன்று பகுதிகளாக பிரித்துக் கொள்வோம்.

1. புலம்பெயர்வதற்கு முன்னர்
2. புலம்பெயர்வின் போது
3. புலம்பெயர்வு நிறைவடைந்த பின்னர்

இக்கட்டுரையின் மூலம் புலம்பெயர்வின் போதும், புலம்பெயர்வு நிறைவடைந்த பின்னரும் ஒரு புலம்பெயர் ஊழியர் என்ற வகையில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய சில விடயங்கள் அலசப்படுகின்றன.

## தங்கியிருக்கும் காலத்தை நீடித்தல் அல்லது சேவையினை நிறைவு செய்த பின்னர் இலங்கைக்கு மீள் திரும்புதல்.



உங்கள் தொழில்தருநர் உங்கள் சேவை தொடர்பாக திருப்தியடைந்து உங்கள் சேவையை நீடிப்பதற்கு தீர்மானிக்கலாம். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தின் போது உங்கள் தொழில் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுவதுடன் நீங்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் கொண்டுள்ள பதிவினையும் நீடிக்க வேண்டும் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

அப்படியல்லாமல், உங்களின் ஒரு நண்பர் ஊடாக அல்லது வேறு ஏதேனும் முறையில் அறிந்துகொண்ட வேறு எவரேனும் ஒரு தொழில்தருநர் உங்களை ஒரு தொழிலுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விரும்புவாராயின் தற்போதுள்ள தொழில்தருநரை கைவிட்டு புதிய தொழில் தருநர் ஒருவரிடம் நீங்கள் செல்ல இயலாது. மேலும் தப்பியோடி வேலை செய்தல் உங்களை ஒரு முறையற்ற புலம்பெயர்ந்தவராக மாற்றக்கூடியது, ஆதலால் தொழிலை மாற்றுவதைப் பற்றி கவனமாக இருங்கள்.

தொழிலை நிறைவுசெய்த பின்னர் நீங்கள் மீண்டும் இலங்கைக்கு திரும்புவதாயின் புலம்பெயர்ந்த நாட்டில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் உங்கள் தொழில்தருநர் உங்களுக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளையும் நிலுவை தொகைகளையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். நீங்கள் புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து வெளியேறிய பின்னர் இத்தகைய கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுதல் இயலாத விடயமாகும்.

புலம்பெயரந்தவர் சேவைக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஏதேனும் பின்வரும் காரணங்களினால் பாதிக்கப்பட்ட ஒருவராக நாடு திரும்பினால்

- நோய்வாய்ப்படுதல்
- இயலாமைக்கு உள்ளாகுதல்
- உடல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகுதல்
- துபிரயோகத்திற்கு உள்ளாகுதல்



பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் நடாத்தப்படும் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களை சந்தித்து தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் நடாத்தப்படும் "சஹன பியச" தற்காலிக தங்குமிடத்தில் உணவு மற்றும் தங்குமிட வசதிகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேற்கூறப்பட்டவாறு பாதிப்புக்குள்ளாகி நாடு திரும்புகின்ற ஊழியர்களுக்கு அல்லது அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு புலம்பெயர் ஊழியர் எதிர்பாராத வகையில் எவரேனும் ஒருவரின் அழுத்தத்துக்கு உள்ளாகி அல்லது திடீர் சுகாதாரச் சீர்கேடு காரணமாக அல்லது எதிர்பாராத வகையில் மரணம் சம்பவித்தால் சம்பவம் நிகழ்ந்து 06 மாதங்களுக்குள் காப்புறுதி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு ஒரு விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்க முடியும். மேற்படி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சில நிபந்தனைகள் உள்ளதுடன் அது தொடர்பாக http://www.slbfe.lk/page.php?LID=2&MID=&PID=110?&NID=& இணையப்பக்கத்திலிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

புலம்பெயர் ஊழியர் புலம்பெயர் கால அட்டவணையை சரியான முறையில் பூர்த்தி செய்த பின்னர் வருகை தருவாராயின் அவர் சமூகத்தில் மீளிணைதல் வேண்டும்.

இவ்வாறுமீளிணைவதற்கு நிலைபேறான வருமான வழிமுறையொன்று கட்டாயமாக காணப்படுதல் வேண்டும். புலம்பெயர்ந்தவர்களுக்கு நிலைபேறான வருமான மூலங்களை தேடிக் கொள்வதற்கும் பேணி வருவதற்கும் ஏதுவான ஆலோசனைகளை தங்களது பிரதேசத்தில் பணியாற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

## முறையற்ற புலம்பெயர்வு என்றால் என்ன?



புலம்பெயர்வு செயன்முறையுடன் தொடர்புடைய ஒழுங்கு விதிகளை உரிய முறையில் பின்பற்றாமல் முறையற்ற வழிமுறைகளில் பிற நாடுகளுக்குள் நுழைவதற்கு முயற்சி செய்தல் முறையற்ற புலம்பெயர்வாகும். இது போலியான ஆவணங்களை தயாரித்தல் முதல் ஆட்களை சட்டவிரோதமான முறையில் தேச எல்லைகளை கடக்கச் செய்தல் வரை விரிவடைந்துள்ளது

இவ்வாறான முறையற்ற புலம்பெயர்பவர்கள் ஆட்கடத்தல், மனித விற்பனை அல்லது சென்றடையும் நாட்டின் சட்டங்கள் ஆகியவற்றில் சிக்கிக் கொள்வதால் தண்டப் பணத்திற்கு அல்லது சிறைத்தண்டனைக்கு உட்படக்கூடும்.

உரிய தகைமைகள் இல்லாத அல்லது சரியான தகவல்களை அடைந்துகொள்ள இயலாத ஆட்களும் முறையற்ற விதத்தில் நாட்டின் எல்லைகளை கடந்த பிற முறையற்ற புலம்பெயர்ந்தவர்களும் தங்களது தற்போதைய சிறந்த பொருளாதார நிலைமையை உதாரணமாகக் காட்டிய சிலரினால் ஏமாற்றப்பட்ட ஆட்களும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பில் அத்தகைய ஆட்கடத்தல்காரர்களுக்கு இரையாகக் கூடும். வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து மனித விற்பனையாளர்கள் ஆட்களை இலகுவாக தமது இரையாக மாற்றிக் கொள்வதற்கு மேற்படி போலியான முகவர்களுக்கு முடியுமாக இருப்பதற்கான காரணம் மக்களிடையில் விழிப்புணர்வு குறைவாக இருப்பதனால் ஆகும்.

ஆட்கடத்தல் (Human Smuggling) மற்றும் மனித விற்பனை (Human Trafficking) உலகில் பல்வேறு நாடுகளில் அவற்றின் சட்ட முறைமையின் ஊடாக தண்டனைக்குரிய ஒரு குற்றமாக இனங்காணப்பட்டுள்ளது. முறையற்ற புலம்பெயர்வு இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழும் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.



## புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (International Organization for Migration) என்பது ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான முதன்மையான சர்வதேச அமைப்பாகும்.

அதன் முக்கிய குறிக்கோள் யாதெனில் பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வினை ஊக்குவிப்பதாகவும். இதற்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு செயலமர்வுகளை நடாத்தி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு அவ்வமைப்பின் உதவிக்கான பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேற்படி செயலமர்வுகளில் புலம்பெயர்வினை பாதுகாப்பான முறையிலும் ஒழுங்கு முறையாகவும் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி புலம்பெயர்பவர்களுக்கு சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அப் பிரிவினால் பேணி வரப்படும் 0774410086 தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ள முடியும்.

பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வின் மூலம் தனி நபர்களுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனும் கோட்பாட்டை புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

இன்றைய கட்டுரை கட்டாயமாக உங்களுக்கு பயனுடையதாக இருந்திருக்கும் என நம்புகின்றோம். கீழேயுள்ள பெட்டியில் கேட்கப்பட்டிருக்கும் வினாவுக்கான விடையை SMS முறையில் தரப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் சீட்டிழுப்பு முறையில் தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி முற்கட்டண (ரீலோட்) அட்டைகளை வெற்றி பெற முடியும். தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி மூலம் அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

வெளிநாட்டிற்கு செல்லுதல் தொடர்பாக அல்லது ஒழுங்கற்ற பயணத்தின் ஊடாக இன்னலுக்கு உள்ளாகியுள்ள நபர்கள் தொடர்பான நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் 0774410086 தொலைபேசி இலக்கம் வாயிலாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

"இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சேவைகளுக்கு நுழைவினை பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தள முகவரி / பெயர் யாது?"

இவ் வினாவுக்கான விடையை பின்வரும் முறையில் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) நேரடி தொலைபேசி இலக்கம் 0774410086 இற்கு SMS (குறுஞ்செய்தி) வாயிலாக மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலம் தொலைபேசி முற்கட்டண அட்டைகளை (ரீலோட்) சீட்டிழுப்பு முறையில் வெற்றி பெறலாம்.

SMS / குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முறை

செய்தி / பால் / வயது / மாவட்டம் / விடை .............................. 0774410086

உதாரணம்
News/ M/ 14/ Colombo/ Answer
News / ஆண் / 14 / கொழும்பு / சரியான விடை

SLBFE

IOM
UN MIGRATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் மண் அகழ்வுகளால் கண்ணிவெடிகளை அகற்றுவதில் சிரமம்

## பூநகரி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி முகமாலை கிளாலி மற்றும் வேம்பெடுகேணி ஆகிய ஆபத்தான பிரதேசங்களில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வுகளால் நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதில் நெருக்கடி நிலை காணப்படுவதாக பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முகமாலை கிளாலி மற்றும் வேம்பெடுகேணி ஆகிய பகுதிகள் ஆபத்தான வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் சர்வதேச தொண்டு நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்தும் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த மணல் வெளியிடங்களுக்கு செல்லப்படுவதுடன் மிதிவெடிகள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளிலே இருக்கின்ற அடையாளக் குறியீடுகளை அகற்றிவிட்டு அந்த இடங்களிலே மணல் அகழ்வுகளை மேற்கொள்வதாகவும் கண்ணிவெடிகளை அகற்றும் தொண்டு நிறுவனங்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-315)




யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் பாடசாலை முதல்வர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்: சுபேசன்)



லயன் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட விசுவமடு மேற்கு பகுதியில் பார்வை குறைபாடு உடைய 750 பேர் இனங்காணப்பட்டு அவர்களுக்கான மூக்குகண்ணாடி வழங்கும் நிகழ்வும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (படம்: தேவானந்தன்)

## காண்பியக்கலை கண்காட்சி

(அராலி)

யாழ்ப்பாணம், சங்கரத்தை துணைவிச் சந்திக்கு அருகாமையில் வீடொன்றில் காண்பியக்கலை கண்காட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - இருபாலையைச் சேர்ந்த சமகால காண்பியக் கலைஞனான தவராசா தஜேந்திரன் என்பவரது காண்பியக்கலை ஓவியங்களே இவ்வாறு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. (நி-104)

## திரிசாரணர்களுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து திரிசாரணர் குழுவின் 6 சாரணர்களுக்கான திரிசாரணர் சத்தியப் பிரமாண நிகழ்வுடன் கூடிய சின்னம் தரித்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

யாழ்.இந்து திரிசாரணர் குழுவானது 2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய சாரணர்களுக்கான திரிசாரணர் குழுவாக ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

## 54 போத்தல் கசிப்புடன் ஒருவர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு புண்ணை நீராவி பகுதியில் நேற்று அதிகாலை கடமையில் ஈடுபட்ட பொலிஸாரால் 54 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

வீதிச் சோதனையின் போது பொதி செய்யப்பட்ட கசிப்பினை மோட்டார் சைக்கிளில் வேறொரு பகுதிக்கு கொண்டு சென்ற பொழுது 54 போத்தல் கசிப்பு டன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பொழுது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)

## இரணைமடுக்குளம் உள்ளிட்ட 4 குளங்களை பராமரிப்பதற்கான ஊழியர்கள் பற்றாக்குறை

### நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் முறைப்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவின் கீழ் உள்ள இரணைமடுக்குளம் உள்ளிட்ட நான்கு குளங்களையும் பராமரிப்பதற்கு 48 வரையான பராமரிப்பு ஊழியர்கள் தேவையான நிலையில் தற்போது ஏழு பராமரிப்பு ஊழியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் குளங்களில் பராமரிப்பு வேலைகளை செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக கிளிநொச்சி கிழக்கு பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், கனகாம்பிகை குளம், பிரமந்தனாறு குளம் உள்ளிட்ட நான்கு குளங்களையும் பராமரிப்பதற்கு 48 வரையான பராமரிப்பு ஊழியர்கள் தேவை.

7 ஊழியர்களிலும் ஒருவரை யாழ்ப்பாணத்திற்கு விடுவிக்குமாறு கோரி இருப்பதாகவும் மேற்படி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தினை பராமரிப்பதற்கு சுமார் 30 பராமரிப்பு ஊழியர்கள் தேவை. பராமரிப்பு ஊழியர்கள் இல்லாத நிலையில் இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டு பகுதிகளில் சிறு சிறு திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதுடன் அவற்றை முன்னெடுப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளும் கிடைக்கப் பெறாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-315)

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கலை முன்னிட்டு துப்புரவுப் பணிகள் முன்னெடுப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கலை முன்னிட்டு ஆலயச் சூழலை துப்புரவு செய்யும் பணிகள் கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு உள்ளது.

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கல் நாளை மறுதினம் 29 ஆம் திகதி விளக்கு வைத்தல் வைபவத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி பங்குனி உத்தரப் பொங்கல் நடைபெறவுள்ளது.

மாவட்ட அரச அதிபரின் ஒழுங்குபடுத்தலில் வருடாந்த பொங்கல் உற்சவ ஏற்பாடுகள் சகல திணைக்களங்களாலும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அந்த வகையில் ஆலய வளாகத்தினை துப்புரவு செய்யும் பணிகள் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி-315)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 320 |
| தக்காளி | 120 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 170 | 150 | 200 |
| பூசணி | 70 | 80 | 60 |
| புடோல் | 140 | 140 | 160 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 140 |
| பாகற்காய் | 400 | 450 | 400 |
| வெண்டக்காய் | 280 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 110 | 100 | 160 |
| பயற்றங்காய் | 150 | 120 | 200 |
| லீக்ஸ் | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 180 | 160 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 1600 | 1200 | 1200 |
| போஞ்சி | 200 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 220 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 320 |
| வெங்காயப்பூ | 130 | 120 | 300 |
| முள்ளங்கி | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 50 |
| வல்லாரை | 140 | 50 | 50 |
| ஈரப்பலா | --- | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு

# க்காவிற்கு பதிலடி கொடுக்கத் தயார்
# ஆதரவுப் படைகள் எச்சரிக்கை

**மேற்கொண்ட வான்வழித் தாக்குதல்களுக்கு பதிலடி ராக இருப்பதாக சிரியாவில் உள்ள ஈரானிய சார்புப் த்துள்ளன.**



சிரியாவில் உள்ள தமது ருப்புக்கள் மற்றும் படை ள் குறிவைக்கப்பட்டால் திலடி கொடுக்கும் திறமை ம்மிடம் இருப்பதாகவும் ச்சரித்துள்ளது.

சிரியாவில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக வெள்ளிக்கிழமை ஒரே நேரத்தில் இரண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

வியாழன் அன்று ஈரானில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானம் என்ற சந்தேகத்திற்குரிய தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்கா வான்வெளி தாக்குதலை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ல் உள்ள புகழ்பெற்ற பிளாடிரான் கட்டடம்
# யன் டொலருக்கு ஏலம்



இந்த கட்டடம் தன் மெல்லிய, முக்கோண வடிவத்திற்கு மிகவும் பிரபலமானது.

நியூயோர்க்கின் அடையாளமாக திகழும் இந்த கட்டடம் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் காலியாக உள்ளது. 100 ஆண்டுகள் பழைமையான இந்த கட்டடம் பல்வேறு கைகளுக்கு மாறி இறுதியாக ரியல் எஸ்டேட் நிறுவனம் ஒன்றின் கைக்கு வந்தது.

அந்த ரியல் எஸ்டேட் நிறுவனம் "பிளாடிரான்" கட்டடத்தை ஏலம் விட முடிவு செய்தது. இதைத் தொடர்ந்து நியூயோர்க்கை சேர்ந்த தனியார் ஏல நிறுவனம் கடந்த இரு தினங்களுக்கு முன் ஏலத்தை நடத்தியது.

இதில் ஆபிரகாம் டிரஸ்ட் என்ற முதலீட்டு நிதியத்தின் சார்பில் ஏலத்தில் பங்கேற்ற அதன் நிர்வாக பங்குதாரர் ஜேக்கப் கார்லிக், 190 பில்லியன் டொலருக்கு "பிளாடி ரான்" கட்டடத்தை ஏலத்தில் எடுத்தார். (நி)

## நள்ளிரவில் தீப்பற்றி எரிந்த படகுகள்
# அமெரிக்காவில் பரபரப்பு



(வோஷிங்டன்)


அமெரிக்காவின் சியாட்டில் துறைமுக நகரில் 30 இற்கும் மேற்பட்ட படகுகள் நள்ளிரவில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் குவிக்கப்பட்டு தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தீ விபத்தின் போது நடுத்தர வயது மிக்க ஒருவர் கப்பலின் உள்ளிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

குறித்த விபத்திற்கான காரணம் தெரிய வராத நிலையில், அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக இருந்த ஒருவரை கைது செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

## றவைக் காய்ச்சல் பாதிப்பு
# ம் கோழிகள் அழிப்பு



பாதுகாப்பதற்காக குறித்த பண்ணையில் உள்ள சுமார் 3,30,000 கோழிகளை அழிக்க அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

ஜப்பானில் கடந்த சில மாதங்களாக பறவைக் காய்ச்சல் தீவிரமடைந்து வருவதும், இதன் காரணமாக இலட்சக்கணக்கான கோழிகள் கொல்லப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## துனிசியாவில் படகு மூழ்கியதில்
## புகலிடக் கோரிக்கையாளர்கள் 19 பேர் பலி


(துனிசியா)

மத்திய தரைக்கடலைக் கடந்து இத்தாலியை அடைய முயன்ற 19 அகதிகள் துனிசியா கடற்கரையில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

மேலும் ஆபிரிக்காவில் இருந்து சென்ற படகில் இருந்த ஐந்து பேரை மட்டுமே தம்மால் மீட்க முடிந்தது என துனிசியப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்திற்குள் 2,000 இற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் இத்தாலிய தீவான லம்பேடுசாவுக்கு வந்தடைந்ததாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த நான்கு நாட்களில்,



அகதிகளை ஏற்றிச் சென்ற குறைந்தது ஐந்து படகுகள் மூழ்கியதில் 67 பேர் காணாமல் போயுள்ளதோடு ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த நான்கு நாட்களில் இத்தாலி நோக்கிச் சென்ற சுமார் 80 படகுகளை தடுத்து நிறுத்தியதாகவும் 3,000 இற்கும் மேற்பட்டவர்களை கைது செய்ததாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் உள்ள வறுமை மற்றும் மோதல் காரணமாக அங்கிருந்து வெளியேறும் மக்களுக்கு ஸ்ஃபாக்ஸ் கடற்கரை ஒரு முக்கிய புறப்பாடு புள்ளியாக மாறியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 137





சற்றுப் போனால் தங்களுக்கே திருட்டுப் பட்டம் கூடக் கட்டி விடுவார்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

தளபதி காவலர்களைப் பார்த்து. "முட்டாள்களா! இந்தப் பிள்ளைக்கு புது ஆடைகள் கொடுக்கும்படி மட்டும்தானே சொன்னேன்? பழையவைகளைப் பற்றி நான் ஒன்றுமே சொல்லவில்லையே? இந்த மூடர்கள் என்னவோ உளறுகிறார்கள். தம்பி! போனால் போகட்டும். பழைய உடைகளைப் பற்றி எதற்காக இவ்வளவு கவலைப்படுகிறாய்? அதற்குள் ஏதாவது உயர்ந்த பொருள் வைத்திருந்தாயோ?" என்று கேட்டார்.

"ஆம் வழிநடைச் செலவுக்காகப் பொற்காசுகள் வைத்திருந்தேன்" என்று வந்தியத்தேவன் சொல்வதற்குள், "அதற்காக நீ கவலைப்பட வேண்டாம். உனக்கு வழிச் செலவுக்கு எவ்வளவு பொன் வேண்டுமோ அவ்வளவு தருகிறேன்!" என்றார் பழுவேட்டரையர்.

"தளபதி! நான் இளவரசர் கரிகாலருடைய தூதன். பிறரிடம் கை நீட்டி பணம் பெறும் வழக்கம் என்னிடம் கிடையாது"

"அப்படியானால், உன்னுடைய உடைகளையும் அதற்குள்ளிருந்த பொற்காசுகளையும் திருப்பி உன்னிடம் சேர்ப்பிக்கச் செய்கிறேன். கவலைப்படாதே! உன் உடையில் வேறு பொருள் ஒன்றும் இல்லையல்லவா?"

வல்லவரையன் ஒரு கணம் யோசித்தான். அந்தத் தயக்கத்தைச் சின்னப் பழுவேட்டரையரும் பார்த்துக் கொண்டார்.

"வேறொரு முக்கியமான பொருளும் என் அரைச்சுற்று ஆடையில் இருக்கிறது. அதை உங்கள் ஆட்கள் தொட்டிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். தொட்டிருந்தால் அவர்கள் தொலைந்தார்கள்!"

"ஆகா! உனக்கு எத்தனை கோபம் வருகிறது? எங்கே, யாரிடத்தில் பேசுகிறோம் என்பதை மறந்துவிட்டே பேசுகிறாய். சிறு பிள்ளையாயிற்றே என்று மன்னித்து விடுகிறேன் அப்படிப்பட்ட பொருள் என்ன?"

"தளபதி! அதைச் சொல்வதற்கு இல்லை. அது அந்தரங்க விடயம்!"

"தஞ்சைக் கோட்டைக்குள் எனக்குத் தெரியாத அந்தரங்கம் ஒன்றும் இருக்க முடியாது!"

"இளவரசர் கரிகாலர் என்னிடம் ஒப்புவித்த அந்தரங்க விடயம்."

"இளவரசர் வடதிசையின் மாதண்ட நாயகர். அவருடைய அதிகாரம் பாலாற்றுக்கு வடக்கே செல்லும். இங்கே சக்கரவர்த்தியின் அதிகாரந்தான் செல்லும்."

"தளபதி! புலிக் கொடி பறக்கும் இடமெல்லாம் சக்கரவர்த்தியின் அதிகாரந்தான். அதில் என்ன சந்தேகம்?"

"ஆகையினால்தான், இந்தக் கோட்டைக்குள்ளே எனக்குத் தெரியாத அந்தரங்கம் எதுவும் இருக்க முடியாது என்று சொல்கிறேன். சக்கரவர்த்தியின் க்ஷேமத்தைக் கருதித்தான்!"

"தளபதி! சக்கரவர்த்தியைக் கண்ணுங் கருத்துமாய்க் காப்பாற்றி வருவதற்காக தங்களுக்கும் பெரிய பழுவேட்டரையருக்கும் சோழ சாம்ராஜ்யம் நன்றிக் கடன்பட்டிருக்கிறது. இன்றைக்குச் சக்கரவர்த்தி தங்களைப் பாராட்டியதும் என் காதில் விழுந்தது.

தங்களுக்குப் பயந்து கொண்டுதான் யமன் தஞ்சைக் கோட்டைக்குள் புகுந்து வராமல் தயங்கிக் கொண்டிருக்கிறான் என்று சக்கரவர்த்தி சொன்னாரே? அது எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தை!"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சாகாத வரம்

(தொடர்ச்சி...)

"காலையில் உங்களைக் காணாமல் துடித்துப் போனோம் உங்களைப் பார்த்த பின்னர் தான் எங்களுக்கு உயிரே வந்தது" என்று சொல்லி அழுதனர்.

"என்ன நடந்தது" என்று கேட்டனர்.

எதையும் மறைத்துப் பேசத் தெரியாத முத்து நடந்தது அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொன்னதுடன், 400 ஆண்டுகள் சாகாமல் வாழ பெற்ற வரத்தையும் பற்றி கூறினான்.

தாங்களும் இதே போல் அதிக ஆண்டு வாழ வேண்டும் என்று திட்டமிட்டனர். பேராசை பிடித்த ரத்தின்மும் வைரமும் தங்கள் இருவரையும் அடித்து அந்த குளத்



தில் வீசி எறியும்படி ஏற்பாடு செய்தனர்.

அடுத்த நாள் அவர்கள் இருவரும் கோவிலின் எதிரில் தூங்கியபடி கிடந்தனர்.

தூங்கி எழுந்தனர். அவர்கள் எதிரில் கடவுள் தோன்றினார்.

"உங்களுக்கு என்ன நடந்தது"? என்றார் கடவுள்.

தங்களை விரோதிகள் அடித்துப் போட்டதாக கூறினர்.

"கடவுளே நான் 1000 ஆண்டு சாகாமல் வாழவேண்டும்.." என்றான் ரத்தினம்.

"நான் 2000 ஆண்டு சாகாமல் வாழ வேண்டும்" என்றான் வைரம். ரத்தினம் 3000 ஆண்டு என்றான். வைரம் 4000 என்றான். இப்படி ஆண்டுகளை ஏற்றிக் கொண்டே போனார்கள்.

கடவுளுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

"நான் சொல்வது போல் செய்தால் உங்கள் திறமைக்குத் தகுந்தவாறு பத்தாயிரம் ஆண்டுகள் கூட சாகாமல் வாழலாம்.." என்றார் கடவுள்.

"சொல்லுங்கள் சொல்லுங்கள்" என்றனர் இருவரும் அவசரம் அவசரமாக. "கோயிலில் எதிரில் இருக்கும் இந்த குளத்தில் நீங்கள் மூழ்கி இருக்கும் ஒவ்வொரு மணித்துளிக்கும் 100 ஆண்டுகள் சாகாமல் வாழும் வரம் கிடைக்கும்" என்று கடவுள் சொல்லி முடிப்பதற்குள் இருவரும் குளத்தில் குதித்தனர்.

இருவரும் நீருக்குள் மூழ்கினர். ரத்தினத்தை விட 100 ஆண்டாவது அதிகம் பெற வேண்டும் என்று வைரம் நினைத்தான்.

வைரத்தைவிட 100 ஆண்டு அதிகமாகப் பெற வேண்டும் என்று நினைத்தான் ரத்தினம்.

யார் அதிக ஆண்டு சாகாமல் இருக்கும் வரத்தைப் பெறப் போகிறார்கள் என்று பார்த்தபடி கடவுள் நின்று கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் வைரமும் ரத்தினமும் பிணமாக குளத்தில் மிதந்தனர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவில்லாத சமயவாதிகள் சமயக்கொள்கைகளுக்காக சண்டையிடட்டும் ஆனால் தர்ம வழியில் நடப்பவன் ஒருநாளும் தவறியவனாகான். - போப்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குலநாசப்படவோ சிவநிந்தை செய்கின்றீர்

சிவனை யார் நிந்தனை செய்தாலும் அவர்கள் குலநாசப்படுவர் என்பது நம் முன்னோர்களின் வாக்கு.

ஆம், நம் முன்னோர்கள் கூறிய மேற்போந்த கருத்தை மதபேதமின்றி நடுநிலை நின்று ஆராய்ந்தால், சிவநிந்தை செய்தவர்கள் குலநாசப்பட்டுப் போனதைக் கண்டறிய முடியும்.

இப்போது கூட, இலங்கையில் சிவநிந்தையும் சைவ சமய அழிப்பும் நடந்த வண்ணமுள்ளது.

இதன் காரணமாக இலங்கை வறுமைப் பிணிக்கு ஆளாகி உலகமெல்லாம் கையேந்துகிறது.

இந்த உண்மையை இன்னமும் உணர்ந்து கொள்ளாதவர்கள் உளர்.

இப்போது வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிலிங்கம் மற்றும் சைவக் கடவுள் விக்கிரகங்கள் விஷமிகளால் உடைத்து வீசப்பட்டுள்ளன.

காலத்தால் தொன்மை மிகுந்த வெடுக்குநாறிமலையில் உள்ள, காலாகாலமாக சைவ மக்கள் வழிபட்டுவந்த சிவலிங்கத்தை உடைத்து எறிவதென்பது சாதாரண சம்பவமன்று.

இவ்வாறானதொரு ஈனச் செயல் பௌத்தத்தில், கத்தோலிக்கத்தில், இஸ்லாத்தில் நடந்திருக்குமாயின் அதன் விளைவு மிகப் பாரதூரமானதாக இருந்திருக்கும்.

ஆனால் இங்கோ சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவப்பரம்பொருளின் சிவலிங்க மூர்த்தத்தை உடைத்தெறிந்ததால், அது குறித்து யாரும் எதுவும் பேசமாட்டார்கள்.

ஏன்? சைவ சமயத்தில் இருக்கக்கூடிய ஒரு சிலரை - ஒரு சில அமைப்புக்களைத் தவிர, ஒட்டுமொத்த சைவமக்கள் ஒன்றுபட்டு தங்கள் எதிர்ப்பைக் காட்டவும் மாட்டார்கள்.

கூடவே மேற்படி சம்பவம் சைவ சமயத்துக்குரியதென்பதால் தமிழ் அரசியல் தரப்புகளும் வாய் திறக்கப் போவதில்லை.

ஏன்? ஆனையிறவில் நடராஜர் சிலை அமைக்கப்பட்டது குறித்து வெளியிடப்பட்ட விமர்சனங்கள்கூட, சிவ அடையாளங்களை உடைப்பிக்கும் பொருட்டுச் செய்யப்பட்டவை என்பதைக்கூட நம்மில் பலர் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர்.

ஆம், ஈழத் திருநாட்டில் சைவ சமயத்தை அழிப்பதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் நடந்தாகியுள்ளன.

அதை நிறைவேற்றி வைப்பதில் சைவ சமயத்தவர்களும் வகிபங்காற்றவுள்ளனர்.

இதனைத் தடுக்காமல்விட்டால், இன்னும் பல சைவாலயங்களில் இந்த அட்டூழியம் நடந்தாகும்.

எனவே இதனைத் தடுப்பதாயின், இது தொடர்பில் இந்திய மத்திய அரசு உடன் தலையிட வேண்டும்.

வெடுக்குநாறிமலையில் சிவலிங்கத்தை உடைத்து எறிந்தது யார் என்பதைக் கண்டறிந்து சம்பந்தப்பட்டவர்களை அம்பலப்படுத்த வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் சிவநிந்தனை குலநாசம் என்பதை எவரும் தயவுசெய்து மறந்துவிடாதீர்கள்.

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனியார் வசமானால் 6,000 தொழிலாளர்கள் வேலை இழப்பர்

### இ.பெ.கூ சேவை சங்கம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 600 எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு தனியார் நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தினால் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொழில்வாய்ப்புக்களை இழப்பார்கள் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சேவை சங்க தலைவர் ஜகத் விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார். துறைமுகம், மின்சாரம் மற்றும் பெற்றோலியம் ஆகிய துறைகளின் தொழிற்சங்க தலைவர்களுடன் நேற்று (26) கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் கொள்வனவுக்கு தேவையான டொலரை சுயமாக திரட்டிக் கொள்கிறது.

கூட்டுத்தாபனம் கடந்த ஜனவரி மாதம் 1,300 கோடி ரூபாய், பெப்ரவரி மாதம் 900 கோடி ரூபாய் இலாபமடைந்துள்ளது. இவ்வாறு இலாபமடையும் நிறுவனத்தையே அரசாங்கம் தனியார்மயப்படுத்த தீர்மானித்துள்ளது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 600 எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கினால் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொழில் வாய்ப்புக்களை இழக்க நேரிடும். இதனால் நாட்டில் பாரிய பிரச்சினைகள் தோற்றம் பெறும் எனத் தெரிவித்தார். (4)

## ஊடகப்படைப்பாக்கப் போட்டி அகில இலங்கை ரீதியில் யாழ். பல்கலை முதலிடம்

அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழகங்களிடையே நடைபெற்ற ஊடகப் படைப்பாக்கப் போட்டிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை முதலாம் இடத்தைக் பெற்றுள்ளது.

எட்டுப் பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில், நாற்பது இடங்களில் 25 இடங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை வென்று சாதனை படைத்துள்ளது.

ஹெல் வெற்றாஸ் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் அனுசரணையில், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தின் உதவியுடன் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்பன பங்குபற்றியிருந்தன.

துறைசார் நிபுணர்களாலும், ஊடகத் தொழில் வாண்மையாளர்களாலும் சுமார் ஒரு வருடமாகத் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட செயலமர்வுகள், பயிற்சிகள் ஆகியவற்றைத் தொடர் ந்து; நான்கு பல்கலைக் கழகங்களிடையே இப்போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. (4,33)

## நாவலர் மண்டபத்திலிருந்து தொல்பொருள் திணைக்களத்தினரை வெளியேறுமாறு பணிப்பு

(யாழ்பாணம்)

யாழ். நல்லூர் நாவலர் கலாசார மண்டப வளாகத்தில் இருக்கும் தொல்பொருள் திணைக்களத்தினரை வெளியேறுமாறு வடமாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ். நல்லூர் நாவலர் கலாசார மண்டபம் அமைந்துள்ள காணி இந்து கலாசார திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுவதால் அவர்களிடம் கையளிப்பதற்குரிய நடவடிக்கை இடம் பெற்று வருகிறது.

இந்நிலையில் நாவலர் மண்டபத்தின் அனைத்து பொறுப்புகளிலும் இருந்து மாநகரசபையை விலக்குமாறு ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கிய நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினரையும் அங்கிருந்து வெளியேறுமாறு ஆளுநர்பணிப்புரை விடுத்துள்ளார்.

அங்கிருந்து வெளியேறும் தொல்பொருள் திணைக்களத்தினர் தமது பொருட்களை பிறிதொரு இடத்தை தேர்வு செய்து காட்சிபடுத்துவதற்கு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (4,33,104)

## தாயை கொலை செய்த மகன் 8 ஆண்டுகளின் பின் கைது

(கொழும்பு)

கெப்பத்திகொல்லாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தாயை கொலை செய்த மகன் 8 வருடங்களுக்கு பிறகு நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி 50 வயதுடைய பெண்ணொருவர் வீட்டில் கொலை செய்யப்பட்ட நிலையில் பொலிஸாரால் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இந்நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்திருந்திருந்தனர். இச்சம்பவம் தொடர்பில் குறித்த பெண்ணின் மகன் 8 வருடங்களுக்கு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். 32 வயதுடைய அவர், கட்டுநாயக்க இராணுவ முகாமில் கடமையாற்றுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (4)

## யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரிக்கு வைரவிழா இன்று

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை வைரவிழா கொண்டாடப்படவுள்ளது.

இதன்போது வைரவிழா மலரும் வெளியீடு செய்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சிறி சற்குணராசாவும் சிறப்பு விருந்தினராகயாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் இறுதி நிகழ்வாக இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது. (4)

## சைவப்புலவர் பரீட்சைகள்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2023 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் ஏப்பரல் மாதம் 28,29,30 மற்றும் மே மாதம் 1 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏப்ரல் 2 ஆம் வாரம் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விஞ்ஞானி" மாஸ்ரர் மண்டைதீவின் ஒரு கல்விச் சொத்து



விஞ்ஞானி மாஸ்ரர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் அன்ரனி மரியதாஸ் அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார் என்ற செய்தி அவரது மாணவர்களையும் அவரை அறிந்தவர்களையும் நிச்சயம் நெருடச் செய்யும்.

அந்தளவிற்கு அவர் ஆற்றிய கல்விப் பணியை நாம் ஒருபோதும் மறந்து விட முடியாது.

ஆம், மண்டைதீவில் உள்ள மாணவர்களுக்கு கணிதத்தையும் விஞ்ஞானத்தையும் கற்றுக் கொடுத்த ஆசான் அவர்.

அவரின் கல்விப் பணியால் மண்டைதீவு மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கும் பல்கலைக்கழகம் செல்வதற்கும் பேருதவி புரிந்தது.

மாணவர்களுக்கு கணிதத்தையும் விஞ்ஞானத்தையும் கற்பித்தது மட்டுமன்றி, உயர்கல்விக்கானபாடத்தெரிவு மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான தெரிவு என அனைத்து வழிகளிலும் மாணவர்களை வழிப்படுத்தியவர்.

மண்டைதீவில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த அவர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வேலணை மத்திய கல்லூரியில் கல்வி கற்றார்.

உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்ற அவர் ஆய்வுகூடப் பரிசோதனை ஒன்றின் போது கடினமான பரிசோதனை ஒன்றைச் செய்து காட்டியதால் அவருக்குக் கற்பித்த ஆசிரியரும் அவரது சக மாணவர்களும் அவரை **விஞ்ஞானி** என்று அழைத்தனர். அன்றைய தரப்படுத்தல் முறைமைகள் மரியதாஸ் அவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியை கொடுக்கத் தவறிய போதிலும் அவர் லங்கா ஆயுள் வேத கல்லூரியில் இணைந்து ஆயுள் வேதத்தில் மருத்துவப் பட்டத்தைப் பெற்றிருந்தார்.

போட்டிப் பரீட்சை மூலம் கிராம உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டு அந்தப் பணியை சிறப்புற ஆற்றினார்.

கத்தோலிக்க மதகுருவாகத் தன்னை ஆக்கி மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்பது அவரின் பெரு விருப்பாக இருந்த போதிலும் அவரின் உடல் நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை.

இருந்தும் தன் வாழ்நாள் முழுவதையும் துறவு வாழ்வாக வாழ்ந்து, கல்விப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்தார்.

சுகயீனம் காரணமாக கடந்த 23.03.2023 அன்று இம் மண்ணுலகை விட்டேகிய அவரின் உடல் இன்று ஆனைக்கோட்டை அடைக்கல மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் அவரின் தாயாரின் நினைவிடத்தில் உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது.

வாழுங்காலத்தில் நல்லதைச்செய்து எவர்க்கும் தீங்கு எண்ணாதவராக, அமைதியாக வாழ்ந்து எல்லோரதும் மதிப்பைப் பெற்ற விஞ்ஞானி மாஸ்ரரின் ஆத்மா நித்திய பேரின் பத்துள் இளைப்பாறட்டும்.

-என். விஜயசுந்தரம்

## நெடுந்தீவில் சுயதொழில் பயிற்சி

(மன்னார்)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள பெண்கள் மத்தியில் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பெண்களுக்கு மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த உற்பத்தி சார் பயிற்சி நெறி நேற்று முன்தினம் சனிக்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த தொழில் பயிற்சியில் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்திய சோதி,இலங்கை கைத்தொழில் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜே.எம்.ஏ. லெம்பேட்,மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள், தீவகப் பெண்கள் வலையமைப்பின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்பட்ட பெண்களும் கலந்து கொண்டனர். (நி-285)

## அரச சேவையாளர்களின் வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் -அமைச்சர் நளின்

(கொழும்பு)

அரச சேவையாளர்களின் வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜா - எல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அரச சேவையாளர்களின் வேதனம் 20 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும்.

கடந்த கால பொருளாதார நெருக்கடியை அடுத்து அரச சேவையாளர்களின் வேதனம் அதிகரிக்கப்படாமல் உள்ளது. எனினும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் வேதனமும் அதிகரிக்கப்பட வேண்டும். அதனூடாக மக்களின் வருவாயை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும்.

இந்தநிலையில் நாட்டு மக்களின் வருவாயை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (நி)

## குடத்தனை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து பிள்ளைகளின் தந்தை உயிரிழந்ததுடன் அவருடன் பயணம் செய்த மகளும் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கூலிவேலை செய்து ஐந்து பிள்ளைகளுடன் மிகவும் வறுமையான நிலையில் குறித்த குடும்பஸ்தர் வாழ்ந்து வந்த நிலையில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

அவர்களின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு அவசரதேவைகளுக்காக மாலைதீவு நாட்டில் வாழ்ந்து வரும் அன்பர் ஒருவர் முன்வந்து ரூபாய் 50 ஆயிரம் நிதியினை வழங்கி வைத்தார். (நி-60)

## தப்பி ஓடிய கைதியை துரத்திப் பிடித்த அதிகாரிகள்

### வைரலாகும் காணொளி

(வவுனியா)

வவுனியா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப் படுத்துவதற்காக அழைத்து வரப்பட்ட கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

சிறை அதிகாரிகளின் பாதுகாப்பில் கொண்டு வரப்பட்ட கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பித்து வவுனியா வைத்தியசாலையை அண்மித்துள்ள வயல்வெளியால் தப்பித்துச் சென்ற வேளை சிறை அதிகாரிகள் பின்தொடர்ந்து சென்று கைது செய்தனர். இதனை கைத்தொலைபேசியில் நபர் ஒருவர் வீடியோவாக பதிவு செய்துள்ளார்.

சிறை அதிகாரிகள் கைதியை துரத்திச் சென்று கைது செய்யும் காட்சிகளும் பதிவாகியுள்ளன. (நி-315)


## சாவகச்சேரி நகராட்சிமன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவக்ச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம்: 11.மீனாட்சியம்மன் வீதி இல-0110 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் T.K சிவராமலிங்கம் என்னும் பெயரில் ஆதனவரிப்பெயரேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணம் கொக்குவில் ஸ்ரேசன் றோட் கனகசபை சிவராமலிங்கமும் பெண் இராசலட்சுமியும் பிரசித்த நொத்தாரிசு பொன்னையா காங்கேயன் முகதாவில் 1993.02.03 ஆம் திகதியிடப்பட்ட 8247 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் அவ்வூர் சிவராமலிங்கம் மகள் ஜெயவதனிக்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் யாழ்ப்பாணம் கொக்குவில் ஸ்ரேசன் றோட் கனகசபை சிவராமலிங்கம் கைம்பெண் இராசலட்சுமி பிரசித்த நொத்தாரிசு செல்லப்பா நடராசா விஸ்வலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1996.12.01 ஆம் திகதியிடப்பட்ட 1440 ஆம் இலக்க சீதன உறுதிப்படுத்தல் சாதனம் மூலம் வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதி மதவடி ஒழுங்கை நாகமணி ஹரிகரன் பெண் ஜெயவதனிக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் பொற்றொழிலாளர் வீதி சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த கனகலிங்கம் மச்சேந்திரகுமார் பெண் விமலாதேவி ஆகியோர் 2020.09.18 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு திசாந்தினி வேணுகஜன் முகதாவில் 698 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியில் மச்சேந்திரகுமார் பெண் விமலாதேவியின் சகோதரியான ஜெயவதனியின் சொந்தமும் ஆட்சியுமானது எனவும் ஜெயவதனி அடியற்று காலமானதன் பின்னர் மச்சேந்திரகுமார் பெண் விமலாதேவியின் சகோதர வழிப்பங்கும் நீண்டகால தடையற்ற ஆட்சியும் சொந்தமும் எனக் குறிப்பிட்டு அவ்வூரைச் சேர்ந்த மச்சேந்திரகுமார் பிரியங்காவுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

**ஆதனவிபரம்:**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று சாவகச்சேரி இறை. நகரசபைக்குட்பட்ட J/302 இல் அமைந்துள்ள "தனிமை வளவும் கள்ளத்தின் வளவும்" துண்டு-01 நிலப்பரப்பு மூன்று (03) குளி பதினைந்து தசம் ஏழு ஐந்து (15.75). இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V. சிவராசா அவர்களால் 05.01.1998 ஆம் திகதியில் அளந்து வரைந்த 1653A இலக்க அளவைப்படத்தின்படி நிலப்பரப்பு 3 குளி 15.75. இதற்கு எல்லை.

வடக்கு :மீனாட்சியம்மன் வீதி
கிழக்கு :மயில்வாகனம் சோமசுந்தரத்துக்குரிய ஆதனம்
தெற்கு :இதன் மிகுதி ஆதனம்
மேற்கு :தெற்கெல்லைக் காணிக்கு போக்குவரத்து செய்வதற்காக இக்காணியிலிருந்து விடப்பட்ட பத்தடி அகலமுள்ள ஒழுங்கை

தற்போது மச்சேந்திரகுமார் பிரியங்கா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி.** (15038)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிகிச்சை...

தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் வன்னியசிங்கம் வீதியை சொந்த இடமாகவும் தற்போது கோப்பாய் வடக்கு இலகடியில் திருமணம் செய்து வசித்து வந்த நிலையில் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் வ.ஜனார்த்தனன் (வயது - 37) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். (4-60)

## மூன்றாம்...

அத்தோடு தமிழ் புத்தாண்டை முன்னிட்டு விடுமுறை 5 முதல் 16 வரை வழங்கப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (4)

## அரசாங்க வேலை...

வடக்கு மாகாணத்தில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த கருத்து தொடர்பில் ஆளுநரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச வேலைவாய்ப்புகளில் வடக்கு மாகாணங்களை சார்ந்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் அரச உயர் மட்டங்களில் முடிவுகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

ஆகவே வடக்கு மாகாணங்களில் இடம்பெறும் அரச வேலைவாய்ப்புகளில் வெளி மாகாணங்களைச் சார்ந்தவர்களை அனுமதிக்க முடியாது. மாகாணத்தில் உள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-104)

## யாழில் குற்றச்...

பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இருக்கின்ற தேசிய பத்திரிகைகள் எதனை எடுத்தாலும் யாழ். மாவட்டத்தின் குற்றச்செயல்கள் தொடர்புடைய செய்திகள்தான் வந்து கொண்டிருக்கின்றன, இங்கிருக்கின்ற பெற்றோர்கள் அதில் கவனம் எடுக்க வேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எங்கே செல்கின்றார்கள், என்ன செலவு செய்கின்றார்கள், எங்கிருந்து காசு வருகின்றது போன்ற விடயங்களை கவனம் செலுத்த வேண்டும்.

நீங்கள் உங்களுடைய பிள்ளைகளில் கவனம் செலுத்தவில்லை என்றால் உங்களுடைய குடும்பம் மட்டுமல்ல உங்களுடைய கிராமம் மட்டுமல்ல இந்த நாடு சீரழிந்து போகின்ற நிலைமை ஏற்படும். நாங்கள் பொலிஸ் மற்றும் ஏனைய பாதுகாப்புப் பிரிவினரோடு கலந்துரையாடல்கள் மேற்கொண்டு இருக்கின்றோம்.

எங்களுடைய மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி விசேட வேலை திட்டங்களை முன்னெடுத்து இருக்கின்றார்.

அது சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று மிக விரைவில் நடைபெற இருக்கின்றது. ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இந்த குற்றச் செயல்களை எவ்வாறு தடுப்பது, இதில் மறைமுகமாகவும், நேரடியாகவும் ஈடுபடுபவர்களை எவ்வாறு இனம் கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக வேலைத்திட்டம் தற்போது நடைபெறுக் கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்தார். (4-33)

## இலவச அரிசி...

சாயிகளிடம் இருந்து வாங்கும் நெல்லை அரிசியாக மாற்றி, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசு வழங்கவுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் 10 கிலோ அரிசி வீதம் இரண்டு மாதங்களுக்கு இலவச அரிசி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த அரிசியைக் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, காலி, மாத்தறை உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## ஆதிலிங்கம் அழிக்...

ன்த்துக்கு அருகில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஒன்றுகூடிய சைவ அமைப்பின் பிரதிநிதிகள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வெடுக்குநாறி எங்கள் சொத்து, வெடுக்குநாறியில் உடைத்த ஆதிலிங்கத்தை மீள பிரதிஷ்டை செய், வெடுக்குநாறியில் ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையைக் கண்டிக்கிறோம் போன்ற கோஷங்கள் இதன் போது எழுப்பப்பட்டன. (4,33,104)

## பௌத்த விகாரை...

துள்ள பகுதியானது கூகுள் வரைபடத்தில் தற்போது வட்டமான ப்ரவத விகாரை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி மலை பகுதியில் நேற்றுக் காலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் சிவலிங்கம் மற்றும் ஏனைய விக்கிரகங்கள் தூக்கியெறியப்பட்டும் காணாமலாக்கப்பட்டும் உள்ளது.

இந்நிலையில் மறுபுறம் குறித்த இடத்தின் பெயரும் பௌத்த விகாரையின் பெயரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## ஆதிலிங்கம்...

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருட்திணைக்களமும் நெடுங்கேணி பொலிஸாரும் பலவேறு தடைகளை ஏற்படுத்தி வந்ததுடன் தொல் பொருட்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த 2021 ஆம் ஆண்டு வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் தொல்பொருட்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஆலயத்தின் நிர்வாகத்தினர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டனர்.

எனினும் கடந்த வருடம் குறித்த வழக்கில் ... ஆலயத்தின் பூசகர் மற்றும் நிர்வாகத்தினர்கள் வழக்கிலிருந்து தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டதுடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கண்டறிந்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலை ஆலயத்திற்கு சென்ற கிராமமக்கள் மற்றும் பூசகர் ஆலய விக்கிரகங்கள் திருடப்பட்டு அழித்தெறியப்பட்டமையைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குறிப்பாக ஆலயத்தின் பிரதான விக்கிரமான ஆதிலிங்கம் அகழ்ந்து எடுக்கப்பட்டு அருகில் இருந்த புதருக்குள் வீசப்பட்டிருந்தது.

அத்துடன் பிள்ளையார், அம்மன், வைரவர் விக்கிரகங்களும் பெயர்த்தெடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தமிழ் மக்களிடையே அதிர்ச்சியையும் கவலைகளையும், ஏற்படுத்தியுள்ளது. (4,299)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1526
மிதுனம் 0 4 7 1 0 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1101
R 17 33 56 63

கொவிசெத
திகதி 2023.03.26
சீட்டிழுப்பு இலக்கம் 3313
C 25 43 47 62

மெகா பவர்
திகதி 26/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1419
M 14 06 16 48 79

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.03.26
சீட்டிழுப்பு இலக்கம் 380
சிம்மம் 01 20 36 52 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2023/03/26
சீட்டிழுப்பு இலக்கம் 5071
S 5 8 7 4 7 8

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2046 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.26 தினம் ஞாயிற்றுக்கிழமை
P 08 09 15 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,163,480/-
DLB

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.26
சீட்டிழுப்பு இல : 4207
ரூ. 3,510,260/-
16 23 33 51 I

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 305
சீட்டிழுப்பு திகதி 2023.03.26 ஞாயிற்றுக்கிழமை
21 42 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,382,480/-


ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்படவுள்ளது ரூ. 2,202,466/-
திகதி 2023-03-26
வெற்றி வாரம் 3758
06 08 43 55
ரூ. 10,359,226/-

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 316,629,636.20
O 32 22 25 41 65
1222
2023.03.26
DLB

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1872
சீட்டிழுப்பு திகதி : 2023.03.26
ரூ. 4,089,520/-
15 22 44 52 D


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| அமரர் | அமரர் |
|---|---|
| நாகலிங்கம் செல்வதயாளரூபன் | செல்வதயாளரூபன் நாகராணி |

தோற்றம் 02.02.1958 — மறைவு 11.02.2023 — தோற்றம் 11.04.1962

கருவில் மட்டும் வெவ்வேறாய்
காண்பவர் மனதில் ஜோடி குருவிகளாய்
கனவாகிப் போனீர்களே
ஒருவரை இழந்து பரிதவித்த போது
இருவரும் ஒன்றாய் சென்றீர்கள்
அன்றில் பறவைக்கு அர்த்தம் புரிய வைத்து
அருவமாகி போனீர்கள்
சென்று வாருங்கள் எம் தெய்வங்களே
என்றும் அரணாய் இருந்து
எம்மை ஆசீர்வதியுங்கள்

(15016)

இல. 52, 3 ஆம் குறுக்கு, யாழ்ப்பாணம். 077 967 2409 075 967 2409 குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14953)

076 825 7716 (ஆகாஸ்)


## இன்று முதல் பால் தேநீர் ரூ.90

ஒருகோப்பை பால் தேநீரின் விலை இன்று முதல் 90 ரூபாயாக குறைக்கப்படுகிறது என உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் பால் மாவின் விலை குறைவடைந்துள்ளதை பயன்படுத்தி மக்களுக்கு இந்தச் சலுகை வழங்கப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதன்படி, 100 ரூபாயாக இருந்த ஒருகோப்பை பால் தேநீரை 10 ரூபாய் குறைந்த விலையில் இன்று முதல் வாடிக்கையாளர்கள்பெற்றுக்கொள்ள முடியும். (4)


நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்.

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567

Manufactured By: SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

(C-6241) (குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6242) V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு (C-6242)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 132 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15057)

077 814 7389
077 986 5457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 105 பரப்புக்காணி விற்பனைக்கு (மேட்டு நிலம்) (நிலப்பரப்பு)




- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற்வீதி) இருந்து 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை (300,000) மூன்று இலட்சம் மற்றும் (200,000) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரம் சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 km தூரம்

(15042)

பார்வையிடும் நேரம் :
காலை 06 தொடக்கம்
மாலை 6 வரை

Owner & Director
T.KALAITHASAN (KARAN)
076 733 6047
076 333 6079
076 733 6093
Office No : 021 315 5900


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.